பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 01 புதன்கிழமை (13-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:40

## சட்டவிரோத ஆயுதங்களை களைவதற்கு ஐ.நாவின் உதவி

கொழும்பு,பெப்.13

நாட்டில் சட்டவிரோதமாகப் புழக்கத்தில் உள்ள ஆயுதங்களைக் களைவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியை அரசு நாடியிருக்கிறது.

பிரச்சினைக்குரிய வடக்கு - கிழக்கு பிரதேசம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் சட்டவிரோத ஆயுதங்களைக் களைய ஐநாவின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்திருக்கிறார்.

போர் நடைபெறாத பகுதிகளில் சட்டவிரோத ஆயுதங்களைக் களையும் பணியில் ஈடுபடும் ஐநாவின் குழு ஒன்று கடந்த ஞாயிறன்று கொழும்பு வந்துசேர்ந்திருக்கிறது.

அரசின் அழைப்பை ஏற்று இங்கு வந்துள்ள நான்கு உறுப்பினர் அடங்கிய ஐநா.குழு கொழும்பில் 10 தினங்கள் தங்கி இருந்து சட்டவிரோத ஆயுதங்களைக் களைவதற்கான நடவடிக்கை குறித்து திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் சட்டவிரோத ஆயுதங்களைக் களைய அரசுத் தரப்பில் எடுகக்கப்படும் இறுதி முயற்சி இதுவாகும்.

நாடு முழுவதும் சுமார் 20.ஆயிரம் சட்டவிரோத துப்பாக்கிகள் பாவனையில் இருப்பதாக உள்துறை அமைச்சு மதிப்பிட்டிருக்கிறது. தென்னிலங்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினையைத் தீர்க்கும் கடப்பாடு இந்தியாவுக்கு உண்டு

### தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

புதுடில்லி,பெப்.13

இலங்கை இனப் பிரச்சினையைத தீர்த்து வைக்கும் தார்மீகக் கடப்பாடு இந்தியாவுக்கு உண்டு.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

'டைம்ஸ் ஒவ் இந்தியா' செய்தியாளருக்கு வன்னியில் வழங்கிய செவ்வியிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

கடந்த காலத்தை மறந்துவிட்டு தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு இந்தியா உதவவேண்டும் - என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

ஏற்கனவே ஒரு தடவை இலங்கை விவகாரத்தில் தலையிட்டு கையைச் சுட்டுக்கொண்ட பின்னர் இந்தியா மீண்டும் ஏன் இதில் சம்பந்தப்பட வேண்டும் என்று அவரிடம் கேட்கப்பட்டபோது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய பேச்சுக்களில் முன்னேற்றம்:

# புரிந்துணர்வு உடன்படிக்கை பெப்.24க்குள் கைச்சாத்து!

## கபினெட் அமைச்சராகிறார் சந்திரசேகரன்

கொழும்பு,பெப்.13

மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சராக இன்று மாலை பதவி ஏற்கிறார்.

புதிய கபினெட் அமைச்சர்களாக மற்றும் ஆறு பேர் இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்வார்கள்.

கபினெட் அமைச்சர்களாக இல்லாத அமைச்சர்கள் மொத்தம் ஏழு பேரே இன்று சத்தியப்பிரமாணம் செய்யவிருக்கின்றனர். மலையக சம

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம் நம்பிக்கை

லண்டன்,பெப்ரவரி13

**தற்காலிக போர்நிறுத்தம் முடிவடையவுள்ள எதிர் வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தர யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் வாய்ப்பு நிச்சயம் உருவாகும்.**

**- இவ்வாறு திடமான நம்பிக்கை கொண்டுள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம்.**



நேற்று லண்டனில் நோர்வே தூதுக் குழுவினருடன் நடத்திய பேச்சுக்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் தனது நம்பிக்கையை வெளியிட்டார்.

சமாதானக்குழுவின் தலைவர் ஹெல்கிசன், முன்னாள் தூதர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் கிறிஸ்டி றொம்ஸ்டான் ஆகியோர் நேற்று பாலசிங்கத்தை அவரது இல்லத்தில் சந்தித்து மூன்றுமணி நேரம் பேச்சு நடத்தினர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம்பெறும் அம்சங்கள் தொடர்பாக விடுதலைப் புலிகளும் அரசுத் தரப்பும் ஏற்கனவே தெரிவித்த விடயங்களில் முரண்பாடு காணப்படும் அம்சங்களுக்கான தனது மாற்று யோசனைகளை நோர்வேக் குழு முன்வைத்தது.

நேற்றைய பேச்சுக்களின் பெறுபேறு குறித்து அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாவது:-

மிகச் சொற்ப விசயங்களிலேயே இன்னும் உடன்பாடு காணவேண்டியிருக்கிறது. குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகளின் சுதந்திர நடமாட்டக் கால

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் திருத்தச் சட்ட மூலம்:

## உயர்நீதிமன்றின் கருத்தை நாடுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு,பெப்.13

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் கொண்டுவரப்பட இருக்கும் திருத்தங்கள் அரசமைப்புக்கு அமைவாக உள்ளனவா என்பது குறித்து உயர் நீதிமன்றத்தின் கருத்தை தெரிவிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதம நீதியரசரிடம் கேட்டிருக்கிறார்.

இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் கருத்தை 24 மணி நேரத்துக்குள் வழங்குமாறு அரசமைப்பின் 122 ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதி பிரதம நீதியரசரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசமைப்பு விதிகளின்படி உயர் நீதிமன்றம் 24 மணி நேரத்துக்குள் கூடி இந்த வேண்டுகோள் குறித்து முடிவு ஒன்றை எடுக்க வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி. அரசு திருப்பி அனுப்பிய 39 தமிழர்கள் கொழும்பில் கைது!

கொழும்பு,பெப்.13

அண்மையில் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா சென்ற சமயம் அந்நாட்டு அரசினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 39 இலங்கைத் தமிழர்களையும் ஆஸ்திரேலிய அரசு நேற்று இலங்கைக்கு நாடு கடத்தியது.

நேற்று அதிகாலை விசேட விமானத்தில் கொழும்பு விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் குற்றப் புலனாய்வுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த 39 பேரும் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்தும் விசாரிக்கப்பட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா அமைப்பு ஒன்றின் மேற்பார்வையில்

## கண்ணிகளை அகற்றிய பின்னரே மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர்!

### அமைச்சர் ஜயலத் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

குடாநாட்டில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணி ஐநாவின் அமைப்பு ஒன்றின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படும். அந்தப்பிரதேசங்களில் கண்ணிவெடிகள் இல்லை என்பதை அந்த அமைப்பு உறுதி செய்த பின்னரே அங்கு மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவர்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள அமைச்சர் யாழ்.செயலகத்தில் நேற்று அரச திணைக்களங்களின் தலைவர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்ட மாநாட்டில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடந்த இந்த மாநாட்டில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, என்.ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.மேயர் செல்லன் கந்தையன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் அமைச்சர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

- தடைசெய்யப்பட்ட ஏழு பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்களை யாழ்ப்பாணத்துக்கு கப்பல் அல்லது விமானம் மூலம் எடுத்துவர பாதுகாப்பு அனுமதி பெறவேண்டிய அவசியம் இனி இருக்காது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அறிவித்தல் ஒன்றை விடுப்பார்.
- யாழ்ப்பாணத்துக்கான விமானச் சேவையை புனர்வாழ்வு அமைச்சு பொறுப்பேற்று நடத்தவிருக்கிறது.
- மன்னாரில் இருந்து குறிகாட்டுவானுக்கு போக்குவரத்துச் சபையின் ஏற்பாட்டில் படகுச் சேவை ஆரம்பிக்கப்படும்.
- குடாநாட்டில் மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண்பதற்கு வசதியாக கண்டிவீதி போக்குவரத்துக்கு விரைவில் திறக்கப்படும்.
- குடாநாட்டில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் ஏமாற்றம்!

கொழும்பு,பெப்.13

தென்னிலங்கையில் இருந்து குடாநாட்டுக்கு விமான மற்றும் கப்பல் மூலம் செல்வோர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி (எம்.ஓ.டி.) பெறும் நடைமுறை உடனடியாக நீக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தபோதும் - பயணத்துக்கான கட்டுப்பாடுகள் எவையும் இன்னும் நீக்கப் படவில்லை. வழமையான நடைமுறைகளே இன்னமும் பின்பற்றப்படுகின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்



யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நேற்று இரவு 'உதயன்' பணிமனைக்கு வருகை தந்தார். அவருடன் 'லங்காதீப' பத்திரிகையின் வாரப்பதிப்பின் ஆசிரியர் சிறி ரணசிங்கவும் உடன்வந்திருந்தார். அவர்கள் இருவரையும் படத்தில் காணலாம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா நேற்று யாழ்.செயலகத்தில் திணைக்களத் தலைவர்கள் மற்றும் அரச அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், நடராஜா ரவிராஜ், மாவை சேனாதிராஜா மற்றும் அமைச்சரின் செயலாளர் ரி.ஜெயரட்ணம், யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன், 'றான்' தலைவர் என்.வாமதேவா, துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.மேயர் செல்லன் கந்தையன் ஆகியோரையும் படத்தில் காணலாம். *(படங்கள்:பொ.இராஜேஸ்வரன்)*

# பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை நேற்று ஆரம்பமாகியது

யாழ்ப்பாணம்,பெப்.13

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்கென நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்த பிரிட்டிஷ் நிபுணர்கள் அடங்கிய வைத்திய நிபுணர்கள் குழுவினர் நேற்றுத் தமது சத்திரசிகிச்சைப் பணிகளை ஆரம்பித்தனர்.

நேற்றுப் பிற்பகல் ஆரம்பமான சத்திரசிகிச்சைப் பணிகள் நேற்று இரவும் தொடர்ந்து இடம்பெற்றன.

நேற்று மாலை வரை 10 பேருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவந்தது.

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர்களைத் தங்க வைப்பதற்கு 24 ஆம் வார்ட்டில் விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை -

சத்திரசிகிச்சைக்குரியவர்களைப் பரிசோதிக்கும் பணி இன்றுமுதல் ஆஸ்பத்திரி நிர்வாகக் கட்டடப் பகுதியில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10-15)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.13

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி யோ.சிவப்பிரகாசம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ஐ-9)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.13

தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி ஆசிரியர்களை (யாழ்.இந்துக் கல்லூரி நிலையத்துக்கு) சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான நேர்முகக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகச் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி த.வில்வநாதன் தெரிவித்தார்.

## பாடசாலைகள் ஒன்றாக இயங்கும்

தென்மராட்சி,பெப்.13

சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவை ஒன்றிணைந்து அடுத்த வாரம் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

# மனைவியைக் கொன்று சடலத்தை சூட்கேஸினுள் வைத்த கணவன்!

## சென்னையில் திடுக்கிடும் சம்பவம்

சென்னை,பெப்.13

தனது மனைவியைக் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டு அவரின் உடலை 'சூட்கேஸ்' ஒன்றுக்குள் போட்டு நெடுஞ்சாலையோர பஸ் தரிப்பிடமொன்றில் போட்டுவிட்டுச் சென்றார் கணவர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் சென்னையில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த உதயகுமார் என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்கு உடந்தையாக இருந்த அவரது சகோதரி குமாரவல்லி என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது:-

உதயகுமார் தனது இரு மகன்மாருடன் சிலகாலமாக சென்னையில் தங்கியிருந்துள்ளார். சம்பவ தினமான கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி இவரின் மனைவி ஜானகி (வயது 29), கணவன், பிள்ளைகள் மற்றும் உறவினர்களை பார்ப்பதற்காக சென்னைக்குச் சென்றுள்ளார். அங்கு கணவனுக்கும், மனைவிக்கும் ஏற்பட்ட தகராறில் உதயகுமார் குரல்வளையை நசித்து ஜனாகியைக் கொலை செய்துள்ளார். பின்னர் தனது சகோதரி குமாரவல்லியின் உதவியுடன் ஜானகியின் சடலத்தை சூட்கேஸுக்குள் போட்டு பஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்.

பல தரப்பிலிருந்தும் கிடைத்த தகவல்களையடுத்து கடந்த ஞாயிறுகிழமை - இலங்கைக்கு தப்பி வர விருந்த சமயம் - உதயகுமார் கைது செய்யப்பட்டார். அவருடன் சகோதரி குமாரவல்லியும் கைது செய்யப்பட்டுள்ளார். பொலீஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (ஐ-9)



திருநெல்வேலி சைவ வித்தியாவிருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்ல புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையால் நிர்மாணித்து கையளிக்கப்பட்ட இந்த கட்டடத்தை நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகன் நாடாவை வெட்டி திறந்துவைப்பதையும் இவ்விழாவில் கலந்து கொண்ட இல்லத்தில் சிறார்கள் அமர்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# யாழ்.ஆஸ்பத்திரியில் இன்று புதிய வார்டுகள் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விடுதிகள் திறப்புவிழா இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா இந்த விடுதிகளைத் திறந்து வைக்கவுள்ளார்.

பணம் செலுத்தித் தங்கிச் சிகிச்சை பெறுகின்ற விடுதிகள், ஆன் தாதியர்களுக்கான ஓய்வு விடுதி மற்றும் புனரமைப்புச் செய்யப்பட்ட சிறுவர் விடுதி ஆகியவற்றை அமைச்சர் திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன் பிரிட்டிஷ் நிபுணர்கள் குழுவினால் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைப் பணிகளையும் அமைச்சர் பார்வையிடுவார். (ஐ-10-15)

# இன்னல்களை அனுபவிக்கும்போதுதான் நாம் வாழ்வில் ஆற்றல் பெற்று உயர்கிறோம்

## சிறுவர் இல்ல கட்டடத் திறப்புவிழாவில் பேராசிரியர் உரை

யாழ்ப்பாணம்,பெப்.13

இடர்கள், இன்னல்களை அனுபவிக்கும்போதுதான் எமக்கு ஆற்றல் வருகிறது. அந்த ஆற்றல் வந்ததும் நாம் வாழ்வில் உயர்ச்சி பெறமுடிகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்ல புதிய விடுதிக் கட்டடத்திறப்பு விழாவில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

வசதிகள் கூடும்போது நாம் சோம்பேறிகளாகி விடுகின்றோம். ஆனால் கஷ்டங்கள் வரும்போதுதான் எம்மை உருவாக்கக்கூடிய ஆற்றலை நாம் பெறுகின்றோம்.

அதேபோல் பிள்ளைகளாகிய நீங்களும் கஷ்டத்திலும் வசதியிலும் ஒரே மாதிரியாக இருக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.

எதிர்கால சமுதாயம் ஒரு நல்ல அறிவுள்ள, கல்வி, ஒழுக்கம் நிறைந்த சமுதாயமாக மிளிரவேண்டும் என்ற குறிக்கோளுடன் இந்த இல்லத்தை அமரர் 'இந்துபோட்' இராசரத்தினம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். அதனை நனவாக்க நீங்கள் அனைவரும் முயற்சிக்க வேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் க.சண்முகநாதன் தனது உரையில் -

இந்த இல்லத்தில் உள்ளவர்களை தொழில்சார் ரீதியாக வளப்படுத்த திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். அத்தோடு இந்த இல்லத்துக்கு குறிப்பிட்ட ஒரு தொகை நிதியை அரசு வழங்கியுள்ளது. இந்த நிதி இல்ல நிர்வாகத்தினிடம் விரைவில் கையளிக்கப்படும் - என்றார்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரக யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி ரிற்றோதோமஸ் தமதுரையில் -

சிறுவர்களுக்கு இந்த இல்லம் செய்துவரும் சமூகசேவைப் பணி பாராட்டுக்குரியது.

இந்த இல்லச் சிறுவர்களின் தேவைகளுக்கு எமது நிறுவனமும் தொடர்ந்து உதவும் எனக் குறிப்பிட்டார்

நல்லூர் பிரதேச செயலர் நா.வேதநாயகன் உரையாற்றுகையில் -

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்விற்கு இப்படிப்பட்ட இல்லங்களின் பங்கு மிகவும் அவசியமானது. இதன் அடிப்படையில் இந்த இல்லத்தின் வளர்ச்சிக்கு, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு மிகவும் அவசியமானது - என்றார்.

சைவவித்தியாவிருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்லப் பொறுப்பாளர் பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தமது நன்றியுரையில் தெரிவித்ததாவது:-

பிள்ளைகளுக்கு அமைதி சந்தோஷத்துடனான சூழலில் கல்வியை வழங்கி நல்ல பூரண மனிதனாக திகழ வைப்பதே எமது சங்கத்தின் நோக்கமாகும்.

இந்த இல்லத்தில் 200 பிள்ளைகள் உள்ளனர். ஆனால் அவர்கள் நெருக்கடியின்றி படுத்துறங்குவதற்கு இடவசதி போதாமல் இருக்கின்றன.

மேலும் பிள்ளைகளின் அனுமதிகள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன. நாம் இடப்பிரச்சினை காரணமாக அனுமதியை நிறுத்தியுள்ளோம் என்றார்.

இந்த நிகழ்வில் சிறுவர் நன்நடத்தை அதிகாரி திருமதி ப.சிவராசா, இல்லத்தின் செயலாளர் சோ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட ஒன்றியத்தின் தலைவர் பொன் திவாகர் ஆகியோரும உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்ச்சியில் நிறைவாழ்வு இல்லத்தில் கல்வி கற்று ஜிசீஈ.உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவுக்குச் செல்லவிருக்கும் சி.சுபதீபாவுக்கு சைவவித்தியாவிருத்திச் சங்க சார்பில் இல்லத்தின் கல்வித் திட்ட பணிப்பாளர் பொ.அரவிந்தன் பதக்கம் ஒன்றை வழங்கி கௌரவித்தார். இதனைத் தொடர்ந்து இல்லத்தில் உள்ள பிள்ளைகளுக்கு 16 ஆயிரம் ரூபா செலவில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தினர் ஒன்றியத்தின் சமூகசேவை நிதியின் வட்டிநிதி மூலம் படுக்கை விரிப்பினை அன்பளிப்புச் செய்தனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சற்குணம் புஸ்பவதி

சிறுப்பிட்டி மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சற்குணம் புஸ்பவதி நேற்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற நாகலிங்கம் சற்குணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துக்குமாரு - சின்னத்தங்கச்சி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், பிரணவன் (கொழும்பு), பிரதீபன் (யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரி - தரம் 12) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற லக்ஷ்மிநாதன், இலங்கநாதன் இராமநாதன், நாகேஸ்வரி (யாழ். ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி - புத்தூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி (புன்னாலைக்கட்டுவன்), சாந்தநாயகி (மட்டுவில்), லோகநாயகி திலகராஜ் (நீர்வேலி பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2002) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொண்டைதுலுக்கி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.இராமநாதன்
(சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி)

(C/20724)

## வல்லிபுரம் தங்கராசா (லொறிச் சாரதி)

சங்கானை, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தங்கராசா நேற்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் ரோகினியின் அன்புக் கணவரும், நந்தகுமார் (லண்டன்), சலூஜினி, சுதர்சினி, றஜனி, மோகனாம்பிகை, கிருஸ்ணகுமார், சுரேஸ்குமார், மீனாம்பிகை, பிரசாந்தகுமார், கிருஸ்ணாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்றவர்களான நாகராசா, தவமணிதேவி மற்றும் தம்பித்துரை ஆகியோரின் சகோதரரும், செல்லையா சின்னத்துரையின் (வெள்ளை) மைத்துனரும், ஜெகதாசன், சூரியபிரகாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.02.2002) புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3மணிக்கு கரைச்சி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சின்னத்துரை (வெள்ளை)
(மைத்துனர்)

*பாரதி வீதி,*
*சங்கானை.*

(சி20721)

# ஈரானிய விமானம் 117 பேருடன் மலையில் மோதி நொறுங்கியது!

தெஹ்ரான்,பெப்.13

ஈரானில் நேற்று 117 பேருடன் பறந்து கொண்டிருந்த விமானம் ஒன்று பனிமலை மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில், விமானத்தில் இருந்த அனைவரும் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

ஈரான் 'எயார் டூர்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான ரியு - 154 ரக பயணிகள் விமானம் நேற்று தலைநகர் தெஹ்ரானிலிருந்து ஹோரராமபாத் நகருக்குச் சென்று கொண்டிருந்த விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஹோராமபாத் விமான நிலையத்தில் தரையிறங்கியபோது மலையில் மோதியதாக அப்பகுதிவாசி ஒருவர் 'ரொய்ட்டர்' செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

உலக அரங்கில்

விமானம் முற்றாக நொறுங்கி சிறிய பாகங்களாகச் சிதறியதாகவும் -

அதிலிருந்த எவரும் உயிர்தப்பியிருப்பார்கள் என்று தான் நம்பவில்லை என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

விபத்து இடம்பெற்ற யாவ்ட் இகௌ மலைப் பிரதேசவாசிகள் கூறுகையில், விமானம் இறங்கத் தொடங்கும் சத்தத்தைத் தொடர்ந்து பாரிய சத்தம் கேட்டதாகத் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான விமானம் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் -

ஆனால் விபத்து நடந்த இடம் அடையாளம் காணப்பட்டுவிட்டதாகவும் -

ஹோராமபாத் ஆளுநர் அலுவலகம் அறிவித்துள்ளது. (ஒ)

# இந்தியத் தேர்தல்களத்தில் சினிமா நட்சத்திரங்கள்



பிரதமர் வாஜ்பாயுடன் நடிகைகள் ஸ்ரீதேவி, ஐஸ்வர்யாராய்

புதுடில்லி,பெப்.13

இந்திய மாநிலங்கள் சிலவற்றில் இடம்பெறவுள்ள சட்டசபைத் தேர்தல்களின் பிரசாரங்களில் சினிமா நட் சத்திரங்கள் முழுவீச்சில் பயன்படுததப்படுகின்றனர்.

பஞ்சாப், உத்தரப்பிரதேசம், உத்திராஞ்சல், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி கடும் சவாலைச் சந்தித்துள்ளது. இதனால் தேர்தலில் வெற்றிபெற அக்கட்சி சினிமா நட்சத்திரங்களின் தயவையே பெரிதும் நம்பியுள்ளது. பாரதிய ஜனதா மட்டுமன்றி எதிர்க்கட்சிகளும் திரையுலகினரை தேர்தல் களத்தில் இறக்கியுள்ளன.

ஹிந்தித் திரையுலகின் மூத்த நடிகரான அமிதாப்பச்சன் முதல் இன்றைய கதாநாயகன் கோவிந்தா வரையிலும், பிரீத்திஜிந்தா, பூனம் திலான் ஆகிய நடிகைகளும் அரசியல் களத்தில் குதித்துள்ளனர்.

அவர்களைத் தவிர சப்னா ஆஸ்மி, ராஜ்பப்பர், ஹேமமாலினி, ஸ்ரீதேவி, ஐஸ்வர்யாராய் ஆகியோரும் அரசியல் கட்சிகளின் பிரசாரப் பீரங்கிகளாக மாறியுள்ளனர். (ஒ)

# நேபாளத்தின் தலைநகரில் குண்டுவெடிப்பு; ஒருவர் காயம்!

காத்மண்டு,பெப்.13

நேபாளத்தின் வருமானவரித் திணைக்கள அலுவலகத்தில் நேற்று வெடிகுண்டு வெடித்தது.

தலைநகர் காத்மண்டுவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். வருமானவரித் திணைக்கள அலுவலகக் கட்டடமும் சேதமடைந்தது.

கடந்த சில வாரங்களாக அரசுக்கு எதிரான தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ள மாவோயிஸத் தீவிரவாதிகளே இந்தக் குண்டுவெடிப்புக்குக் காரணம் என்று நேபாளப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை தொடரும் என்று அரசு அறிவித்த சில மணித்தியாலங்களில் இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.(ஒ)

## அல்ஜீரியாவில் 10 பொதுமக்கள் சுட்டுக்கொலை

அல்ஜீரியாவில் முஸ்லிம் தீவிரவாதிகள் 10 பொதுமக்களை சுட்டுக் கொன்றுள்ளனர்.

முஸ்லிம் தீவிரவாதத் தளபதி ஒருவர் அரச படைகளால் கொல்லப்பட்ட ஒரு நாளின் பின்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம)

# காதலர்தினம் கொண்டாட இந்தியாவில் கடும் எதிர்ப்பு!

மும்பை,பெப்.13

காதலர்தினக் கொண்டாட்டங்களுக்கு இந்தியாவில் தீவிர இந்துத்துவ அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரித்துள்ளன.

குறிப்பாக நாகரிக நகரான மும்பையில் சிவசேனை உட்பட இந்துத்துவ அமைப்புகள் காதலர்தினக் கொண்டாட்டங்களுக்கு எதிராகக் கடும் போக்கைக் கடைப்பிடித்துள்ளன.

மேலைநாட்டு கலாசாரமான காதலர்தினக் கொண்டாட்டங்கள் வியாபார நோக்கத்துக்காகவே இந்தியாவில் பரப்பப்படுவதாக அவை கூறுகின்றன. இந்திய கலாசாரத்தை சீரழிக்கும் இதுபோன்ற கொண்டாட்டங்களில் ஈடுபடுபவர்கள் மோசமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று மும்பை நகரில் பரவலாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதேசமயம் காதலர்தின வாழ்த்து அட்டைகள் தயாரிப்பில் புகழ் பெற்றுள்ள 'ஆர்ச்சிஸ்' என்ற நிறுவனம் இந்துத்துவ அமைப்புகளிடமிருந்து தமக்கு பாதுகாப்பு பெற்றுத்தருமாறு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது. (ஒ)

# ஆப்கானியக் கிராமம் ஒன்றில் அமெரிக்கப்படை அட்டகாசம்!

## பதினைந்து பேர் உயிரிழப்பு

லண்டன்,பெப்.13

ஆப்கானிஸ்தானியக் கிராமம் ஒன்றில் நுழைந்து அமெரிக்கப் படையினர் அட்டகாசம் புரிந்ததாகக் கூறப்படுவது தொடர்பாக அமெரிக்க அரசு விசாரணை நடத்தி வருகிறது.



அமெரிக்கப்படையின் அட்டகாசத்துக்கு உள்ளான ஒருஜ்கான் கிராமத்தில் ஒரு காட்சி.

கடந்த ஜனவரி மாதம் 23 ஆம் திகதி ஒருஜ்கான் என்ற கிராமத்துக்குள் நுழைந்த அமெரிக்கப் படையினர் தேடுதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு கிராமவாசிகளை அடித்து உதைத்துத் தாக்கியதாகவும் -

இதில் 15 பேர் வரை உயிரிழந்ததாகவும் -

அமெரிக்கப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

ஒருஜ்கான் கிராமத்தில் 27 பேர் கைது செய்யப்பட்டு கந்தகாரில் உள்ள அமெரிக்கத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கைதிகளில் ஒருவரான அப்துல் ரவூப் (வயது 60) கூறுகையில், தனது விலா எலும்பு நொறுங்கும் அளவுக்கு அமெரிக்கப் படையினர் தன்னைத் தாக்கியதாகத் தெரிவித்தார்.

தம்மை விடுவித்த போது நடந்த சம்பவங்களுக்காக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் மன்னிப்புக் கேட்டதாகவும் -

ஆனால் தன்னால் அவர்களை மன்னிக்க முடியாதென்றும் -

ரவூப் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம் இந்தக் குற்றச்சாட்டுகளை அமெரிக்க இராணுவம் மறுத்துள்ளது. ஒருஜ்கான் கிராமத்தில் சிலர் கைது செய்யப்பட்டதை ஒப்புக்கொண்ட அமெரிக்க இராணுவப் பேச்சாளர் மேஜர் ஏ.சி.ரோப்பர், ஆனால் அவர்கள் எதிரிகளாக நடத்தப்படவில்லை என்று கூறியுள்ளார்.



தாக்குதலுக்கு உள்ளான ஒருவர் நடந்ததை விளக்குகிறார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் இந்தச் சம்பவம் புதிய சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

இது தொடர்பாக பென்டகன் பேச்சாளர் விக்டோரியா கிளார்க் கூறுகையில் -

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை என்றும் -

ஆயினும் இது தொடர்பாக அமெரிக்க அரசு விசாரணையை மேற்கொண்டுள்ளதாகவும் -

தெரிவித்துள்ளார். (ஒ)

# போர்த்துக்கல் பெண்மணிக்கு ஒரே சூலில் 6 குழந்தைகள்!

லிஸ்பன்,பெப்.13

போர்த்துக்கல் நாட்டில் பெண்ணொருவர் ஒரே சூலில் 6 குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

31 வயதான இடாலினா சன்டோஸ் என்ற அந்தப் பெண் கருவுற்று 22 வாரங்களில் 6 குழந்தைகளைப் பிரசவித்தார். இது குறை மாதப் பிரசவமாகும்.

3 ஆண் குழந்தைகளையும் 3 பெண்குழந்தைகளையும் தற்போது பிரசவித்துள்ள சன்டோஸ்ஸுக்கு ஏற்கனவே 8 வயதில் ஒரு மகன் உள்ளார்.

அவரது 6 குழந்தைகளும் 14 அவுன்ஸ்க்கும் 20 அவுன்ஸ்க்கும் இடைப்பட்ட நிறைகளைக் கொண்டுள்ளன.

உலகில் ஒரே சூலில் 6 குழந்தைகள் பிரசவிக்கப்பட்ட சம்பவங்கள் மருத்துவ ஆவணங்களின்படி இதுவரை 100 என்று கணிக்கப்பட்டுள்ளது. (ஒ)



இஸ்ரேலின் பீர்ஷெவாவா நகரில் சிற்றுண்டிச்சாலை ஒன்றின் மீது இரு பலஸ்தீனர்கள் சரமாரியாகச் சுட்டதில் அங்கு உணவருந்திக் கொண்டிருந்த இஸ்ரேலிய பெண் இராணுவத்தினரில் இருவர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் காயப்பட்ட இராணுவ வீராங்கனை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம்.

# அமெரிக்கா மீது தாக்குதலுக்கு யேமன் தீவிரவாதிகள் திட்டம்


## எவ்.பி.ஐ. தீவிர எச்சரிக்கை

வாஷிங்ரன்,பெப்.13

யேமன் நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிரவாதி அமெரிக்க நிலை ஒன்றின் மீது தாக்குதல் நடத்த உள்ளதாக அமெரிக்க சமஷ்டி புலனாய்வு நிறுவனம் (எவ்.பி.ஐ) எச்சரித்துள்ளது.

சவூதி அரேபியாவை பிறப்பிடமாகக் கொண்ட யேமன் பிரஜையான பாவாஸ் யஹ்யாஅல் ரபீ (வயது 23) என்பவரின் தலைமையில் 10 பேர் கொண்ட குழு ஒன்று அமெரிக்க நிலை மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக எவ்பி.ஐ. அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமது இரகசியப் புலனாய்வுத் தகவல்கள் நம்பிக்கையானவை என்று கூறிய அந்த அதிகாரிகள் தாக்குதலின் இலக்கு குறித்து தகவலேதும் கூறவில்லை.



பாவாஜ் யஹ்யா அல் ரபீ.

அமெரிக்காவில் விமானத் தற்கொலைத் தாக்குதலாகவோ அல்லது அமெரிக்காவின் நேச நாடான யேமனில் உள்ள அமெரிக்க நிலையாகவோ தாக்குதல் இலக்கு அமையலாம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் செப்ரம்பரில் அமெரிக்காவில் இடம்பெற்ற விமானத்தற்கொலைத் தாக்குதலின் பின்னர் எவ்.பி.ஐ. விடுத்துள்ள தீவிரமான அபாய எச்சரிக்கை இதுவென்று கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தானிலும், கியூபாவில் உள்ள குவான்டனாமோ தளத்திலும் சிறைவைக்கப்பட்டுள்ள அல்கெய்டா மற்றும் தலிபான் கைதிகளிடம் நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே இந்தத் தாக்குதல் திட்டம் தெரிய வந்ததாகக் கூறப்படுகிறது.

தாக்குதலுக்கு திட்டமிட்டதாகக் கருதப்படும் ரபீ எங்கிருக்கிறான் என்பது பற்றிய தகவல்களும் தெரியவரவில்லை. (ஒ)

## பிலிப்பைன்ஸில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்

மணிலா,பெப்.13

பிலிப்பைன்ஸின் தென் பகுதியில் நடந்த மோதலில் அபுசெயாப் இயக்கத் தீவிரவாதிகள் 10 பேர் கொல்லப்பட்டதாக பிலிப்பைன்ஸ் இராணுவம் தெரிவித்தது.

படையினரில் 9 பேரை தீவிரவாதிகள் கொன்ற இரு நாள்களின் பின்னர் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது. (ஒ)

## ஆப்கானில் மீண்டும் மோதல் அபாயம்!

காபூல்,பெப்.13

ஆப்கானிஸ்தானில் பக்ரியா மாகாணத்தில் போட்டி இனக்குழுக்களிடையே மீண்டும் மோதல்கள் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளன.

மாகாண ஆளுநர் பதவி தொடர்பாகவே இந்த நிலை உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

## லைபீரிய தலைநகருக்கு ஆபத்து!

வடஆபிரிக்கா நாடான லைபீரியாவின் தலைநகர் மொன்ரோவியாவை சுற்றிவளைத்துள்ள கிளர்ச்சியாளருடன் லைபீரிய இராணுவம் சண்டையிட்டு வருகிறது.

நாட்டின் வடமேற்கு பிரதேசத்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள கிளர்ச்சியாளர்கள் தற்போது தலைநகரைக் கைப்பற்ற முயன்று வருகின்றனர். (ஒ)

## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)


# கிளைக்குழுத் தேர்தல் -16-02-2002

மேற்படி சங்கத்தின் கிளாலி கிளைக்கான கிளைக்குழுத் தேர்தல் எதிர்வரும் (2002.02.16) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்குப் புலோலி கிழக்கு, புலோலி, பருத்தித்துறை என்ற முகவரியில் இயங்கும் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டடத்தில் கலந்துகொள்ளத் தகுதிபெற்ற (ரூபா நூறு பங்குப் பணம் செலுத்தியவர்கள்) கிளாலிக் கிளையின் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர். (594) செயலாளர்.

# 33ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1920 |  | 2002 |
| - | | - |
| 02 | | 01 |
| - | | - |
| 16 | | 12 |

## அமரர் கனகலிங்கம் வைத்திலிங்கம்

*"இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்*
*பெருமை பிறங்கிற்று உலகு"*

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்திகேட்டு வருகை தந்து பலவழிகளில் எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், இன்று (13.02.2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்:
*வட்டு. தெற்கு, மாவடி, வட்டுக்கோட்டை.*

வேலுப்பிள்ளை குடும்பத்தினர்,
பெறாமகன் - வே.மகாதேவன் *(ஜேர்மனி)*
மருமகள் - நகுலராணி *(ஜேர்மனி)*
(வி-20707)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.13

ஸ்ரீலங்கா உதைப்பந்தாட்ட சமமேளத்தினால் நடத்தப்படவிருக்கும் உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் 16ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை உதைபந் தாட்ட லீக்கினூடாக விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் தேவரையாளி இந்துக் கல்லூரியில் வைத்து வழங்கப்படவுள்ளதாகவும் -

விண்ணப்பித்தவர்களைத் தவறாது வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறும் - லீக் செயலாளர் ரி.வரதராஜன் கேட்டுள்ளார். (ம-9)

## கூட்டம்

தென்மராட்சி,பெப்.13

தென்மராட்சி ஒருங்கிணைக்கப்பட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத்தின் பொதுச் சபையினருக்கான கூட்டம் நாளைமறுதினம் பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொழில் நிலையங்களை விருத்தி செய்வதற்கு சங்கத்திடம் கடன் உதவிபெற விண்ணப்பித்த சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உறுப்பினர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் மன்ற அலுவலகத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

## சிறுவர் கதைப்புத்தகங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,பெப்.13

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் கற்கும் மாணவர்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தின் சிறுவர் கதைப் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

வலயக் கல்வி அலுவலகத்திற்கு நேற்று வழங்கப்பட்ட இப்புத்தகங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## பனை அபிவிருத்திச் சபை, திக்கம் வடிசாலை

# பாதுகாப்பு அறை கூறுவிலை கோரல்

மேற்படி வடிசாலையில் பாதுகாப்பு ஊழியர் கடமையாற்றும் கட்டடம் ஒன்று 12'-0" X 9'-0" X 8'-0" அளவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டட வரைபடத்தைப் பனை அபிவிருத்திச் சபை, 53, கண்டி வீதியில் உள்ள தலைமைக்காரியாலயத்தில் அல்லது திக்கம் வடிசாலையில் பார்வையிட்டு கேள்விப்பத்திரங்களை ஏற்று, 01.03.2002 இற்கு முன்னர் கூறுவிலையை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பொ.சிவபாதம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை. (C/20708)

*53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

# "உலக தமிழோசை"

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' கடல்கடந்தும் கன்னித்தமிழ் மறவா கனேடிய தமிழர்கள் மத்தியில் கலை, பண்பாடு தமிழ்மொழியுடன் பேணப்படுவது யாவரும் அறிந்ததே.

"விளம்பரம்" என்ற பெயரில் கடந்த பன்னிரண்டு வருடகாலமாக மாதமிருமுறை இலவசமாக வெளிவரும் பத்திரிகை என்பதை வெளிப்படுத்துவதில் பெருமை அடைகின்றோம்.

எழுத்தாளர்களின் ஊக்கம், வாசகர்களின் பாராட்டு, வர்த்தகர்களின் ஆதரவு பத்திரிகை வெளிவர ஆதரவு நல்கின்றன. அத்துடன் எம்மை இன்னமும் உலகத் தமிழோசை "சஞ்சிகையை" உலகளாவிய ரீதியில் வெளியிட கால்கோள் இட்டுள்ளது. சர்வதேசரீதியில் பல எழுத்தாளர்கள் ஆக்கமும் ஊக்கமும் தருகின்றனர். இதேவேளையில் மேலும் பல ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களையும் எதிர்பார்க்கின்றோம். இந்த ஆக்கங்கள் பலதரப்பட்டவர்களுக்கும் ஏற்றவையாக இருப்பது விரும்பத்தக்கது.

*யாழ். தொடர்புகட்கு:-*

இ.செல்வநாதன் (நகுலன்)
நியூ லக்சுமி ரேட்ஸ்,
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி.
T.P.:- 2928

**VLAMBARAM PUBLICATIONS,**
P.O.Box 37527,
*31, Tapscott Road,*
*SCARBOROUGH, ONTARIO MIB 5P9, CANADA.*
(585)



# இதய அஞ்சலி

## அமரர்

# கந்தையா சத்தியசீலன்

(முகாமையாளர், மானிப்பாய் ப.நோ.கூ. சங்க எரிபொருள் நிலையம் - மானிப்பாய்)

நல்லெழில் சேர் நவாலியூர் சீர் மகனாம் கந்தையா
இல் மகிழ நல்மகனாய் இப்புவியில் வந்துதித்தாய்!
பல் புகழ் சேர் உடுவிலிலே நல்வாழ்வைத் தேர்ந்தெடுத்தே
செல்வமது ஈரெட்டும் சிறப்புடனே தான்பெற்றாய்!

சத்தியத்தில் சீலனென கற்றமுள்ளோர் போற்றிடவே
உத்தியென்ன செய்தே நீ அவருள்ளத் துறைந்தாயோ?
வித்தை பல கற்றுயர்ந்தாய் கற்றகலை புகட்டிடவே
வித்தகனே எண்ணூட்டும் ஆசானாய் நீ மிளிர்ந்தாய்!

வீரன் இவனெனவே வீறாப்புடன் சொல்லும்
சீலன் நீ கால்பதித்த விளையாட்டுத் திடல்களெல்லாம்
தீரன் நீ முகாமை, நிர்வாகத் துறைகளிலே
காலன் அவனுக்கேன் பொறுக்கவில்லை இவைகளெல்லாம்?

தலைமகனே நீ ஊட்டி வளர்த்துவிட்ட உறவுகளும்
விலையில்லா வாழ்வழிந்து பரிதவிக்கும் உன்மனையும்
நிலையறியா வயதினிலே எந்தை உந்தனையே
தொலை[illegible] திங்கு ஏங்கிநிற்கும் உன் அன்புச் செல்வங்களும்
ஆறாகி நீர் சொரிந்து அலைக்கழிய வைத்து [illegible]ட்டே
ஆறெட்டில் அவசரமாய் நீ விட்டுச் சென்[illegible]?
ஆறட்டும் அவர்களென நாம் பகர மொழியிலையே
பேறெட்டும் வாழ்வடைந்தாய் ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

*குறிப்பு:* இன்று (13.02.2002) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரின் இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

*தகவல்:*
V.S.மகேந்திரன்
(விளையாட்டு முதல்வர்,
யாழ். மத்திய கல்லூரி)

(599)

குடும்பத்தினரும்,
மைத்துனர்களும்,
நவாலி.

உதயன்

## தாமதங்கள் வேண்டாம்!

நிரந்தர யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையில் இடம்பெறவேண்டிய சில முக்கிய அம்சங்களில் அரசு - புலிகள் இருதரப்புகளுமே இன்னமும் உடன்பாடு காணாததால் அந்த உடன்படிக்கை இறுதிவடிவம் பெறுவது தாமதமாவதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது.

நிரந்தர யுத்தநிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் சுதந்திரமாக நடமாட அனுமதிப்பது என்ற புலிகள் தரப்புக் கோரிக்கையை ஏற்க அரசு பின்னடிப்பதாகவும், போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் வகையிலான புதிய யோசனைகளை அது முன்வைப்பதாகவும் தகவல் கசிந்திருக்கிறது. ஆனால் இதுவிடயத்தில் புலிகள் விட்டுக்கொடுக்கும் நிலையில் இல்லை.

உடன்படிக்கையில் மற்றெல்லா விடயங்களையும்விட, புலிகள் இயக்க உறுப்பினர்களின் தரை நடமாட்டச் சுதந்திரம் மிகவும் முக்கியமானது என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெளிவுபடக் கூறிவிட்டார்.

இந்த விடயத்தில் அரசு இணங்கி வந்தால்தான் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் குடாநாட்டுக்கான பாதையைக் கண்டி வீதி வழியாகத் திறப்பதும் சாத்தியப்படும் என்று பாலசிங்கம் கோடி காட்டியிருக்கிறார்.

தற்போதைய நிலைமையில் குடாநாட்டுக்கான தரைப்பாதை ஒன்றைத் திறப்பது இதனால் தாமதமாகலாம். இது குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் பலவற்றுக்குமான தீர்வுகளையும் மேலும் தாமதப்படுத்தும் என்பது தெளிவு.

இதேசமயம், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கும், இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்கும் இடையிலான தரைப் பாதைகளைத் திறப்பது திட்டமிட்டபடி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறுமா என்ற சந்தேகமும் கிளம்பியிருக்கின்றது.

ஏ-9 கண்டி வீதியை ஓமந்தையிலும், மன்னார் - உயிலங்குளம் வீதியை உயிலங்குளம் பகுதியிலும் போக்குவரத்துக்காகத் திறப்பதற்குப் புலிகள் ஏற்கனவே சம்மதம் தெரிவித்து - பாதைகளைத் திறப்பதற்கு தமது தரப்பில் எடுக்கப்படவேண்டிய நடைமுறை ஏற்பாடுகள் அனைத்தையும் பூர்த்திசெய்துவிட்டு - தயாரான நிலையில் இருக்கின்றார்கள். ஆனால், குறித்த தினத்தில் பாதைகளைத் திறப்பது சாத்தியப்படாது என்றவாறு அரசு மற்றும் இராணுவத் தரப்புகளில் இருந்து தகவல் வெளியாகியிருக்கிறது.

சில நடைமுறைச் சிக்கல்களைக் காரணங்காட்டி, குறித்த தினத்தில் பாதை திறக்கப்படுவது சாத்தியப்படாது போல இருக்கிறது என்று அரசுத் தரப்பு அமைச்சர் ஒருவர் கூறியிருக்கிறார். பாதை திறப்பு நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டிய வவுனியா இராணுவத்தரப்பும் அதற்கு இன்னமும் தயாராக இல்லை என்று தெரிகிறது.

இந்தப் பின்னணியில் -

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எப்படியாவது பாதை திறக்கப்பட்டுவிடும் என்ற வன்னி மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறாதுபோல் தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கு நிலையான - நீடித்த - தீர்வு ஒன்றைக்காண நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்பாக எடுக்கப்படவேண்டிய நல்லெண்ண நடவடிக்கைகளில் பிரதானமானது இந்தப் பாதை திறப்பு விடயம்.

நோர்வே ஏற்பாட்டிலான சமாதான முயற்சிகள் அதற்குரிய சரியான தடத்தில் நகரவேண்டுமாயின், முதலில் நல்லெண்ணப் புறச்சூழல் சரியாகப் பேணப்படவேண்டும். நல்லெண்ண சூழலை உருவாக்குவதிலும் அதனைத் தொடர்ந்து பேணுவதிலும் இரு தரப்புகளுமே கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும். இதில் தேவையற்ற தடை, தாமதங்களும், அவநம்பிக்கைகளும் ஏற்பட இடமளிப்பது சமாதான முயற்சிகளில் 'சாண் ஏற முழஞ்சறுக்கும்' நிலையை உருவாக்கிவிடலாம்.

நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை உருவாக்குவதும், மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதுமான முயற்சிகளில் தாம் தீர்க்கமாக இருப்பதை விடுதலைப் புலிகள் பல வழிகளிலும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். முதலில் தமது கட்டுப்பாட்டில் உள்ள வன்னிக்கும் அங்கிருந்து குடாநாட்டுக்கும் தரைப்பாதை ஒன்றைத் திறப்பதன்மூலம் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் பெரும்பாலானவற்றுக்குத் தீர்வுகண்டு சமாதான முயற்சிகளுக்கு ஊக்கமளிக்க முடியும் என்பது புலிகளின் நிலைப்பாடு. ஆனால் நல்லெண்ணப்புறச் சூழலை முன்னெடுப்பதில் அரசின் 'வேகம்' போதாமலிருப்பது குறித்து தமிழர் தரப்புகளில் அதிருப்தி கிளம்பியிருக்கிறது.

இத்தகைய அதிருப்தி - அவநம்பிக்கை - ஏற்பட பிரதமர் ரணில் இடமளிக்கக்கூடாது. சவால்கள் இருப்பினும்கூட பாதை திறப்பு போன்ற விடயங்களில் தாமதம் காட்டுவது நல்லதல்ல என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.

---

வடமராட்சியில் திடீர் வேட்டை

## கசிப்பு உற்பத்தியாளர் 9 பேருக்கு 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு!

கரந்தாரம் வடமராட்சிப் பகுதியில் மதுவரிக் குழுவினர் கசிப்பு வேட்டையில் ஈடுபட்டனர். இதில் கசிப்பு உற்பத்தி, விற்பனையில் ஈடுபட்ட 10 நபர்கள் சிக்கினர். அவர்களில் 9 பேரிடமிருந்து குற்றப் பணமாக 54 ஆயிரத்து 500 ரூபா அறவிடப்பட்டது.

மதுவரிப் பொறுப்பாளர் றொகான் சன்ஜே ராஜ" தலைமையிலான குழுவே இவர்களைக் கைதுசெய்துள்ளது.

அகப்பட்டவர்களின் பெயர் விவரங்களும் விதிக்கப்பட்ட தண்டப்பணமும் வருமாறு:-

தம்பன் திருச்செல்வம் (கரவெட்டி) - 1,500 ரூபா, கணபதி கணேஷ் (வல்வெட்டித்துறை) - 3,000 ரூபா, தயாநிதி வசந்தா (கரவெட்டி) - 10,000 ரூபா, செல்வராசா அருந்தவபூரணம் (அல்வாய்) - 5,000 ரூபா, கிட்டிணன் தெய்வேந்திரம் (வல்வெட்டித்துறை) - 7,500ரூபா, திருச்செல்வம் நிமல் (வல்வெட்டித்துறை) - 7,500 ரூபா, மாணிக்கம் துரைராசா (உடுப்பிட்டி) - 7,500 ரூபா, நாகன் பரம்சோதி (பருத்தித்துறை) - 5,000 ரூபா, தம்பன் அருணகிரிநாதன் (அல்வாய்) - 7,500 ரூபா

மற்றும் குமாரசுவாமி ஜெயசுந்தரம் (வல்வெட்டித்துறை) என்பவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-9)

### பொலீஸாரிடம் வசமாக மாட்டிய திருடன்

வடமராட்சிப் பிரதேசத்தில் சைக்கிள் திருட்டுகள் உட்பட பல திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் நபர் ஒருவர் அண்மையில் நெல்லியடிப் பொலீஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

பொலீஸ் விசாரணையின்போது ஆறு சைக்கிள்கள் இவரிடமிருந்து மீட்கப்பட்டு நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சைக்கிள்களின் உரிமையாளர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாமென சப் - இன்ஸ்பெக்டர் பிரதீப்குமார தெரிவித்தார். (ம-117)

---

## நாட்டு நடப்பு

### நடுத்தெரு சீதனமோ?

நாடது சொந்தம் என்றால்
நடுத்தெருவுமே சொந்தமாமோ?
கூட்டமாய் நால்வர் ஒன்றாய்
கூடியே சைக்கிள் ஓடலாமோ?
இட்டம்போல் மோட்டார் சைக்கிளோடி
இழுபடல் என்ன நீதி?
கட்டியது தாலி என்றோ
கைப்பிடித்து ஓடுகின்றீர்?
கிட்டப் போவோர் தம்மை
கீழ்த்தரமாய்ப் பேசலாமோ?
வீட்டிடு இப்பழக்கமெல்லாம்
விரைவினில் விடிவு கிட்ட
கட்டாயம் உம்போல் வாரை
தண்டிக்கும் காலம் வந்தேயாகும்

- விகடகவி.

---

போரில் சிதைந்த வன்னி 100 வருடங்களுக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது

# அரசுக்கு நிகரான நிர்வாகத்தை புலிப்போராளிகளும் நடத்துகின்றனர்

*சுமார் 7 ஆண்டுகளின் பின்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்துக்கு சமீபத்தில் செய்தியாளர்கள் செல்ல அரசு அனுமதித்தது. அந்தச் சமயத்தில் அங்கு படையெடுத்துச் சென்றனர் செய்தியாளர்கள். அவர்களில் ஒருவராகச் சென்றிருந்த பி.பி.ஸி. செய்தியாளர் பிரான்ஸில் ஹரிசன் தமது வன்னிப் பயண அனுபவத்தை வெகுசுவையாக - வர்ணனையாக - இங்கு நினைவு கூருகின்றார்.*

புலிகளின் பகுதிக்கு நான் சென்று திரும்பலாம் என்று இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு எனக்கு வழங்கிய அனுமதிக் கடிதம் ஒரு வெள்ளைக் காகிதத்தில் இருந்தது. இந்த அனுமதிக் கடிதத்தை ஏராளமாகப் பிரதிகள் செய்து நான் வைத்துக்கொண்டேன். முன்னர் எல்லாம் சிந்தனைக்கும் எட்டாத விடயம் இந்தப் பயணம். அதற்கான அனுமதி எனக்கு இப்போது வழங்கப்பட்டுள்ளது என்று வழியெங்கும் உள்ள சோதனைச் சாவடிகளில் சந்தேகத்தோடு என்னைப் பார்க்கும் பொலீஸாருக்கும், இராணுவத்தினருக்கும் கொடுப்பதற்காகவே இந்தப் பிரதிகளை நான் தயாரித்தேன்.

அரசிடம் எனக்கு அனுமதி கிடைத்ததா என்று விடுதலைப் புலிகள்கூட இந்தக் கடிதத்தைக் கேட்கக் கூடும் என்று எனது சகாக்களிடம் நகைச்சுவையாகச் சொன்னேன்.

உண்மையிலேயே இவ்வாறு பின்னர் நடந்தது. புலிகளின் சோதனைச் சாவடி ஒன்றில் புலிப் போராளிகள் என்னைச் சோதனையிட்டனர்.

### என்னே விசித்திரம்!

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியினூடாக எமது வாகனம் சென்றுகொண்டிருந்தது. எங்கள் வாகனத்தில் விடுதலைப் புலிப் போராளி ஒருவரும் அமர்ந்திருந்தார். நான் சிந்தித்துப் பார்த்தேன் எவ்வளவு விசித்திரமாக உள்ளது இது. இலங்கையின் பிறபகுதிகளில் புலிகள், அச்சத்துக்குரியவர்களாக மட்டுமல்ல, பேய்களை ஒத்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இவர்களோடு சகவாசம் வைத்தாலே - அந்த ஒரு காரணத்தை வைத்தே - ஒருவர் சிறையில் தள்ளப்படலாம.

புலிகளின் பிரதேசத்துக்குள் சென்ற பின்னர் ஒரு கண்ணாடிக்குள் நடக்கும் பிரமைதான் ஏற்பட்டது. இலங்கை அரசுக்குச் சமமான - சகல விதத்திலும் இணையான - மிகவும் சீரான - நிர்வாகம் ஒன்றைப் புலிகள் நடத்திக்கொண்டிருப்பதை நான் அறிந்திருக்கவில்லை.

### சீருடை அணிந்த புலிப் பொலீஸார்

இலங்கையின் மற்றைய இடங்களில் உள்ள பொலீஸ் நிலையங்களைப்போல, புலிகளின் பகுதிகளிலும் பொலீஸ் நிலையங்களைச் சுற்றி அழகான மலர்த் தோட்டங்கள் காட்சியளித்தன. சிவப்பு, வெள்ளை வர்ணம் தீட்டிய இரும்புச் சட்டங்கள் அந்த மலர்ப் படுக்கைகளுக்கு எல்லையிட்டன. இலங்கைப் பொலீஸாரைப் போலவே புலிகள் அமைப்பின் பொலீஸாரும் சீருடை அணிந்திருந்தார்கள்.

வித்தியாசமாக அவர்களது பட்டிகளில் புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. நான் சந்தித்த பொலீஸாரில் ஒருவர் இலங்கைப் பொலீஸாரின் வாளேந்திய சிங்க அடையாளத்துடனான இடைப்பட்டியை அணிந்திருந்தார்.

பெரும்பான்மை சிங்களவர்கள் அப்பாவித் தமிழர்களை வெட்டிக் கொன்ற இனக் கலவரத்தின்போது தாம் இலங்கைப் பொலீஸில் வேலை பார்த்ததாகவும், தமது சகாக்கள் தம்மைத் தாக்கக்கூடும் என்ற அச்சத்தில், தன்னால் தமிழர்களுக்கு எந்த உதவியும் செய்யமுடியாமற் போனதாகவும் அவர் சொன்னார்.

"உங்கள் இடைப்பட்டியில் பிழையான மிருகத்தை அல்லவா காட்சி தர விட்டிருக்கிறீர்?" என்று அவரைக் கேட்டேன்.

"இல்லையே, கவனமாகப் பாருங்கள், சிங்கத்தின் கையிலிருந்த வாளை வெட்டி எடுத்துவிட்டேன்" என்று காட்டினார் அவர்.

### எலும்புகளையே முறித்தெடுத்த பயணம்

மிக மோசமான வீதிகளின் வழியே 5மணித்தியாலங்கள் பயணம் செய்து கிளிநொச்சி என்ற இடத்தை வந்தடைந்தோம்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஊர்களில் மிகப் பெரியது கிளிநொச்சி. எங்கள் எலும்புகளை எல்லாம் 'மிக்ஸி'யில் போட்டு அரைத்தது போல கார்

## ரயில், தொலைபேசி, கணனியை கண்ணிலும் காணாத சிறுவர்கள்

பயணத்தால் எலும்புகள் வலித்தன.

சிங்கள போர்க் கைதிகள் 10 பேரைப் புலிகள் விடுதலை செய்யும் செய்தியாளர் மாநாடு கிளிநொச்சியில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு நாங்கள் சென்று இறங்கினோம்.

எங்களுடைய கைகளில் மட்டும்தான் செயற்கைக்கோள் தொலைபேசிகள் இருந்தன. நீண்ட எட்டு வருடங்களாகத் தமது குடும்பத்தினரிடமிருந்து பிரிக்கப்பட்டிருந்த 10 சிங்களக் கைதிகளும் இலங்கையின் தென்பகுதியில் உள்ள தமது உறவுகளோடு கண்களில் கண்ணீர் பெருக உரையாடுவதற்கு எமது செயற்கைக்கோள் கைத்தொலைபேசியை வழங்கினோம்.

### புலிகளைக் கவர்ந்த கைத்தொலைபேசி

மறுநாள் எமது கைத்தொலைபேசிகளில் புலிகள் அக்கறையும் ஆர்வமும் காட்டினார்கள். அதன் சிறிய அளவு, சுத்தமான தொனி அவர்களைக் கவர்ந்திருக்கவேண்டும்.

எனது மனத்திரையில் ஒரு கற்பனை ஓடத்தொடங்கியது.

புலிகள் அமைப்பினர் வெளிநாடுகளில் உள்ள தமது ஆதரவாளர்களுக்கு அவசரமாக அழைப்பு விடுக்கின்றனர். மறுகணம் ஆயிரக்கணக்கான இத்தகைய கைத்தொலைபேசிகள் கப்பல்கள் மூலம் கடத்தப்பட்டு இலங்கையின் கரையோரப் பகுதியூடாக புலிகளின் கைகளில் பக்குவமாக வந்துசேர்கிறது.

இது எனது கற்பனைதான்.

தங்குவதற்கு ஹோட்டல்களே இல்லாத அந்தப் பிரதேசத்தில், நாங்கள் தங்க ஆயத்தங்கள் அமர்க்களப்பட்டன.

### வியக்க வைத்தது

இரவு 11மணிக்கு தச்சுவேலைச் சத்தம் கேட்டபோது, வியப்படைந்தேன். தரையில் படுப்பதற்கு நாங்கள் தயார் என்று சொல்லியும்கூட, எமக்காகப் பிரமாண்டமான 4 கால்கள் கொண்ட மரக்கட்டில்கள் ஒன்றைத் துரிதமாகச் செய்து, நுளம்பு வலை இட்டுத் தந்தது கண்டு நெகிழ்ந்து போனேன்.

### புலிகளின் பண்பும் விருந்தோம்பலும்

தம்மிடம் வருவோரை உபசரிக்கும் புலிகளின் உயரிய பண்பைப் பற்றி - விருந்தோம்பலைப் பற்றி - சமையல் திறமைபற்றி - நான் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

கொழும்பில் எனக்கு உணவு சரியாகக் கிடைக்கவேயில்லை. ஆனால் புலிகள் பிரதேசத்தில் விருந்துக்கு பஞ்சமே இல்லை. ஆரம்ப உணவாக சுவையான பதார்த்தங்கள், இறுக்கமாக அடைக்கப்பட்ட நண்டுக் கறி, தொடர்ந்து பல்வேறு விதம் விதமான நறுமணம் மிக்க உணவு வகைகள். மொத்தத்தில் திருப்தியான உணவு கிடைத்தது.

புலிகளின் தலைவர் தமது உணவை விரும்பி ரசித்து உண்பவர் என்று அறிந்தேன். புலிப் போராளி ஒவ்வொருவருக்கும் சமைக்கத் தெரிய வேண்டும். அப்போதுதான் ஓர் அமைப்பை வழிநடத்தும் பல நுட்பங்களை அந்தப் போராளி அறிய முடியும என்பது புலிகள் தலைவரின் கருத்து என்றும் அறிந்துகொண்டேன்.

### ஆப்கானிஸ்தானை ஒத்த வடபகுதி

இலங்கையின் புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள வடபகுதி ஆப்கானிஸ்தானை ஒத்திருந்தது. ஏராளமான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. சிந்தித்துப்பார்க்கமுடியாத அளவுக்கு வடபகுதி அழிக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டிருந்ததை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

இலங்கையின் இதர பகுதிகளைவிடக் குறைந்தது நூறு வருடங்களாவது வடபகுதி பின்தங்கியுள்ளது. அங்கு குழாய்நீர் வசதி கிடையாது. மின்சாரம் இல்லை. விமானக் குண்டுகளினாலும் பீரங்கிகளாலும் நாசமாக்கப்பட்ட பாடசாலைகளில் சுவர்களோ, கூரைகளோ இல்லாத வகுப்பறைகளில் குழந்தைகள் படித்தனர்.

### ரயிலைக் கண்டிராத சின்னஞ் சிறுசுகள்

இந்த இளஞ்செல்வங்கள் ஒரு கணனியைக் கண்டதில்லை. ரயில் என்றால் என்ன என்றே தெரியாது. கணனியை, ரயிலை, தொலைபேசியை அறியாமல் இவர்கள் வளர்ந்துவருகின்றார்கள்.

ஒரு குழந்தை என்னோடு பேசும்போது, "எங்களுக்குப் படிப்புத் தேவை, அப்போதுதான் குண்டு விழும்போது நாங்கள் ஓடி ஒளிக்க

(9 ஆம் பக்கம் பார்க்க)

---

### நாளை

மாசி 02
வியாழக்கிழமை
(14-02-2002)
திதி : துதியை
பிற்பகல் 5.27 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
முழுவதும்
சுபநேரம் : 8.03 - 9.33
ராகுகாலம் : 2.03 - 3.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

போர் ஒருவனுக்கு மகிழ்ச்சியளிக்கும், அவன் போருக்குச் செல்லாவிடில்.

☆ குழந்தையின் உணவு தாய்ப்பால் - அன்னை வழங்கிடும் அமிர்தம் தாய்ப்பால் - செல்வக் குழந்தைகள் விரும்பும் தாய்ப்பால் - அதை அன்னை கொடுப்பது அன்பால். (C/20536)

## தேவை

பிறவுன் அன் கொம்பனி நீர்ப்பாசனத் திட்டங்களில் விவசாய வியாபார நோக்குடைய வீட்டுத் தோட்டங்களுக்கு வேண்டிய செயன்முறைகளில் முன்னோடிகள் நாங்கள். றெயின்பேட் அமெரிக்கா ஸ்தாபனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றோம். நாங்கள் யாழ்ப்பாணத்தில் எங்கள் பிரதிநிதியாகச் (FREE LANCE) செயற்பட்டு, நீர்ப்பாசனத் திட்டங்களை விற்பனை செய்வதற்கும், செயற்படுத்துவதற்கும் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவரிடம் விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம். இதற்குரிய பயிற்சியையும் வழிகாட்டலையும் நாங்களே வழங்குவோம்.

நியமனம்: **FREE LANCE TECHNICAL OFFICER**

விண்ணப்பிப்போர் முதலில் கொழும்பு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை உறுதிப்படுத்திக்கொண்டபின், யாழ்ப்பாணத்தில் தொலைபேசி இல.021-2605இற்கு தொடர்பு கொள்ளவும். நேர்முகப் பரீட்சை மாசி மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் Bastian Hotel இல் நடைபெறும்.

தொலைபேசி:-
01-693097, 695238, 674332.
Fax:- 01-688853, 692814.

இயக்குநர், விவசாயப்பிரிவு,
*பிறவுன் அன் கொம்பனி,*
*75,தேவநம்பியதிஸ்ஸ மாவத்தை,*
*கொழும்பு-10.* (C-20628)

## கண்ணீர் அஞ்சலி



### க.சி.நமசிவாயம்

*(ஓய்வுபெற்ற நில அளவையாளர்,*
*செயலாளர், ஓய்வூதிய சங்கம்,*
*கோம்பையன் மணல் பரிபாலன சபை)*

*அன்புக்கோர் இலக்கணமாய் அவனியிலே வாழ்ந்து*
*அளப்பரிய சேவை தன்னலம் கருதாதாற்றி*
*பண்புக்கோர் தெய்வமாய் பாரிலே திகழ்ந்த நமசிவாய*
*ஐயாவே!*
*உங்களை இழந்து தவிக்கின்றோம் நாம்.*
*ஓம் சாந்தி!*

- பாசமிகு பிள்ளைகள்.

(573)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரிப் பணியாளர் சோ.தபேசன் அவர்களின் அன்பு மைத்துனர்

### அமரர் நல்லையா வசந்தகுமார்

*(அலுவலகப் பணியாளர் - வலிகாமம் வலயம்)*


அவர்களின் திடீர் மறைவையிட்டு அன்னாரின் குடும்பத்தினருடன் துயர் பகிர்வதோடு, அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி,*
*சண்டிலிப்பாய்.* (559)

அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1941 - 09 - 06



ஆண்டவன் அடியில் 2002 - 01 - 14

அமரர்

### பொன்னம்பலம் சீனிவாசகம் குணரத்தினம்

(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, அச்சுவேலி மத்திய கல்லூரிகளில் கடமையாற்றி இளைப்பாறிய கல்வித் திணைக்கள உத்தியோகத்தர், தோப்பு சனசமூக நிலையம், தோப்புக் கிராம முன்னேற்றச் சங்கம், தோப்பு போதிப் பிள்ளையார் நிர்வாக சபை ஆகியவற்றின் உறுப்பினர்)

எமது குடும்பத் தலைவரின் மறைவு கேட்டு நேரில் வருகை தந்தும், அனுதாபங்களைத் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலி களை வெளியிட்ட தோப்பு வாழ் மக்களுக்கு எமது நன்றி களைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

*இராச வீதி,*
*தோப்பு,*
*அச்சுவேலி.* (569)

*நீங்காத நினைவுடன்:*
மனைவி, மகள், மகன்,
மருமக்கள், பேரன்,
சகோதரர், உறவினர்.

## மன்னார் வங்கியில் பணம் சூறை!

மன்னார்,பெப்.13

மன்னார் நகரில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளை கடந்த ஞாயிறு இரவு சூறையாடப்பட்டுள்ளது.

வங்கியின் கூரையைப் பிரித்து உள்ளே சென்ற திருடர்கள், பணம் மற்றும் சில பெறுமதிமிக்க பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

மறுநாள் காலை வங்கியின் முகாமையாளர் திறந்து உள்ளே சென்றபோதே அங்கு சூறையாடல் இடம்பெற்றிருந்தது தெரியவந்தது. பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சூறையாடப்பட்ட பணம், பொருள்களின் விவரம், பெறுமதி இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

அதே இரவு மன்னார் துயர் துடைப்புச் சங்கத்திலும் திருட்டு இடம்பெற்றுள்ளது. (க)

## கோப்பாயில் பாதீனியம் அழிப்பு

கோப்பாய்,பெப்.13

கோப்பாய்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கை பரவலாக இடம்பெற்றது.

கோப்பாய் லயன்ஸ் கழக ஆதரவோடு நடைபெற்ற இந்தச் சிரமதானத்தின்போது லயன்கழக அங்கத்தவர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சனசமூக நிலையங்களை சேர்ந்த உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். (ம-72)

## சோதனைகள் நிறுத்தம்

தென்மராட்சி,பெப்.13

வடமராட்சிப் பகுதியிலிருந்து தென்மராட்சிப் பகுதிக்குச் செல்வோருக்கு கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் உள்ள சோதனைச்சாவடிகளில் சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

கொடிகாமம் நகர் தவிர்ந்த ஏனைய இடங்களில் மக்கள் சோதனைகள் எதுவுமின்றிப் பயணத்தை மேற்கொள்கின்றனர். கொடிகாமத்தில் பொலீஸார் அடையாள அட்டையினைப் பார்வையிடுகின்றனர்.

மீசாலை, புத்தூர்ச் சந்தி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த பதிவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. (ம-117)

## ஆலோசனை கூட்டம்

தென்மராட்சி,பெப்.13

சாவகச்சேரி நகரப்பகுதியில் உள்ள அரச, உள்ளூராட்சி, கூட்டுறவு, வங்கிகள் ஆகியவற்றின் அலுவலகங்களை மீள இயங்குவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்.செயலகத்தில் உள்ள இந்து சமய கலாசார அமைச்சின் செயலகத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி மக்கள் நலன்காக்கும் கழகச் செயலாளர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் இந்துசமய கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.அரச அதிபர் உட்பட திணைக்களத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-117)

## பயிரழிவு விவரங்கள் சேகரிப்பு!

உடுவில் கமநல கேந்திர நிலையம் தனது பகுதியில் மழை வெள்ளத்தினால் ஏற்பட்ட பயிரழிவு பற்றிய விவரங்களை விவசாயிகள் சம்மேளன ரீதியாகச்சேகரித்து வருகின்றது.

பயிர் செய்கைபண்ணப்பட்ட பரப்பளவு, மழை வெள்ளத்தினால் அழிந்த பரப்பளவு ஆகிய விவரங்களைத் தயாரித்து தமக்கு உடன் அறிவிக்குமாறு தமது பிரிவில் உள்ள விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் உடுவில் கமநல கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமாரன் கேட்டுள்ளார். (ம-135)

## இடம்மாற்றம்

நவாலியில் இயங்கிய
**Dr.சிவஞானியானின்**
**வைத்தியசாலை**
***ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோயிலடிக்கு***
இடம்மாற்றப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

*- நிர்வாகி.*

(649)

அதிகளவில் விற்பனையாகும்
நிப்பொன் (NIPPON)
தன்னியக்க Rice Cooker
கொண்டு உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்.
Non Stick
அதிசிறந்த உத்தரவாத தரம் கொண்டது

5 % விலைக் கழிவு



- ★ சக்தி சேமிப்புடன் அதிக விரைவான சமையல்
- ★ வெப்பநிலை பேணக் கூடியது
- ★ 9 இற்கு மேற்பட்ட வடிவங்கள்
- ★ மலர் வடிவங்களும், கவர்ச்சிகரமான வண்ணங்களைக் கொண்டது
- ★ With / Without Steamer கண்ணாடி / Stainless மூடி

ஒரு வருட உத்தரவாதம்

LANKA NIPPON
No.18, Keyzer St, Colombo - 11. Tel: 437735.
No.10, Trelawny Place, (Behing Milk Bar),
Bambalapitiya Junc, Colombo - 4. Tel: 589992.
(C/20643)
நிப்பொன் உத்தரவாதமுள்ள தயாரிப்புக்கள்

## கண்ணீர் அஞ்சலி



வேலணை மேற்கு, சிற்பனை முருகன்
ஆலய பரிபாலனசபை உபதலைவரும்,
வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன்
ஆலய பரிபாலனசபை உபதலைவரும்,
வேலணை மேற்கு கிராமோதய
சபைத் தலைவரும்,
வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க
தலைவரும்
சமய, சமூகத் தொண்டரும் ஆகிய
அமரர்

### வாதவூரார் தவச்செல்வம் (J.P.)

அவர்களின் மறைவையிட்டு மீளாத்துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*356,ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/20694)

உரிமையாளரும், ஊழியர்களும்,
அன்னராஜா ஸ்ரோர்ஸ்.

## முதலாம் வருட நினைவஞ்சலி

தோற்றம் 12 - 08 - 1927



மறைவு 25 - 01 - 2001

திருமதி

### அப்பையா சரஸ்வதி

திதி: பூர்வபக்க பிரதமை

எமது அன்புத் தெய்வமே! தாயே!!
ஓராண்டு கழிந்தால் என்ன?
ஒரு யுகம் தான் சென்றால் என்ன?
நீங்கள் எமக்கு அணையாத தீபமன்றோ!
மீளாத்துயில் கொண்டு எமையெல்லாம்
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்ற
எமது அன்புத் தெய்வமே!
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அன்புடனே எம்மை அரவணைத்து
அணையாது ஒளிவிட்ட தீபமன்றோ!
வேதனையோ தீரவில்லை!
எமது மங்காப் பெருஞ் செல்வமே!
உங்கள் பாசமிகு நினைவுகளை நினைத்து
தினந் தினம் துடியாய்த் துடித்துக் கலங்குகின்றோம்!

*காரைக்கால் சிவன் கோயிலடி,*
*இணுவில் கிழக்கு.*

*பிரிவால் துயருறும்:*
கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(627)

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு 60 லட்சம் ரூபாவுக்கு உபகரணங்கள்!

## புனர்வாழ்வு அமைச்சு வழங்கும்

யாழ்ப்பாணம்,பெப்.13

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சினால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நோய்களைக் கண்டறியும் நவீன இயந்திரங்கள் வழங்கப்பட இருப்பதாக அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

வழங்கப்படவுள்ள உபகரணங்களின் பெறமதி அறுபது லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமது அமைச்சின் ஏற்பாட்டில் தெற்கில் உள்ள மக்கள் வழங்கிய நிதி உதவியில் இருந்து இந்த இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் ஜயலத் தெரிவித்தார்.

கடந்தகால வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'பிளாஸ்ரிக்' சிகிச்சை அளிக்க விசேட குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும் -

அங்கு அக்குழு நடத்தவிருக்கும் முகாமுக்கு ஒருகோடியே 50 லட்சம் ரூபா செலவிடப்படுகின்றது எனவும் - அவர் மேலும் கூறினார். (ம-3)

# கைதடி சித்த வைத்தியசாலையை அங்கேயே இயங்கவைக்க முயற்சி

## புனரமைப்புப் பணிகள் தொடர்கின்றன

யாழ்ப்பாணம்,பெப்.13

கைதடி சித்த போதனா வைத்தியசாலையை மீண்டும் அதே இடத்தில் இயங்க வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதனுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 2000ஆம் ஆண்டு மே மாதத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையையடுத்து வைத்தியசாலைக்குப் பெரும் அழிவு ஏற்பட்டது.

திடீரென ஏற்பட்ட யுத்தத்தினால் அங்கிருந்த மருந்துப் பொருள்கள் மற்றும் தளபாடங்கள் போன்றவற்றைக்கூட எடுத்து வரமுடியாத நிலையில் கொக்குவில் சந்திக்கு அருகில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் தற்போது இந்த வைத்தியசாலை இயங்கிவருகிறது.

வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை நிதியின் மூலம் சேதமடைந்த வைத்தியசாலையைப் புனரமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அதேசமயம் வைத்தியசாலையின் ஒருதொகுதி கட்டடங்களின் புனரமைப்பு வேலைகள் ஏற்கனவே பூர்த்தியடைந்திருக்கின்றன.

- இவ்வாறு பூர்த்தியடைந்த பகுதியில் மீண்டும் வைத்தியசாலையின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதன் மூலம் அங்குள்ள மக்களின் வைத்தியத் தேவையைப் பூர்த்தி செய்யமுடியும் எனப் பலரும் கருதுவதனால் விரைவில் வைத்தியசாலை அங்கு செயற்படவுள்ளது.

யுத்தத்தின் காரணமாகப் பல கோடி ரூபாவுக்கு அழிவு ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலையின் பிரதான தண்ணீர்த் தாங்கி, கராஜ், பிரேத அறை, 'பம்' நிலையம், மருந்துகள் தயாரிக்கும் அறை என்பன முற்றாகச் சேதமடைந்துள்ளன.

குசினி, விடுதிகள், பிரசவ விடுதி என்பனவும் சேதமடைந்துள்ளன. வெளிநோயாளர் பிரிவு சேதமடைந்த போதும் புனரமைப்புச் செய்யப்பட்டதை அடுத்து அப்பகுதியிலேயே வைத்தியசாலை விரைவில் இயங்கவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-10)

## ஊர்காவற்றுறை பிரதேச செயலக புதிய கட்டடம்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் ஒன்று ஒரு கோடியே 90 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்தக் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. விரைவில் பிரதேச செயலகத்திலும் இது ஒப்படைக்கப்படும் என்று கட்டடத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-180)

## பண்டத்தரிப்பில் நடமாடும் வங்கிச் சேவை

இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளை, பண்டத்தரிப்பில் மாதத்தில் இரு தடவைகள் தனது நடமாடும் வங்கிச் சேவையை நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

பண்டத்தரிப்பு வர்த்தக சங்கமும் பொது மக்களும் விடுத்திருந்த வேண்டுகோளை ஏற்று அடுத்தமாதம் முதல் இந்த நடமாடும் வங்கிச் சேவை மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் முகாமையாளர் ந.ஜெயரத்தினம் தெரிவித்தார். (ம-135)

# திருடப்பட்ட 6 மோ. சைக்கிள்கள் யாழ். பொலீஸாரால் மீட்கப்பட்டன!

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் திருட்டுப்போன 6மோட்டார் சைக்கிள்கள்களை யாழ்.பொலீஸ் நிலையப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் தற்போது யாழ். பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

மோட்டார் சைக்கிள்களைப் பறிகொடுத்தவர்கள் யாழ்.பொலீஸ் நிலையத்துடன் தொடர்புகொண்டு மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் தங்களுடையது இருக்கிறதா என்பதை அடையாளப்படுத்துமாறு யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இந்தத் திருட்டுக்களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் முயற்சியில் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அவர் சொன்னார். (ம-180)



மீட்கப்பட்ட 6 மோட்டார் சைக்கிள்களும் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தபோது எடுத்த படம். (படம் : பொ. இராஜேஸ்வரன்)

### பருத்தித்துறையில் இருந்து கொடிகாமத்துக்கு

# பஸ், ஆளணி வசதி கிடைக்கும்போது காலை 7.30க்கும் சேவையை நடத்தலாம்

## இப்படிக் கூறுகிறார் போக்குவரத்துச் சபை முகாமையாளர்

பருத்தித்துறையில் இருந்து கொடிகாமத்திற்கு காலை 7.30 மணிக்கு, மற்றொரு பஸ் சேவையை நடத்துவதற்கு, எம்மிடம் மேலதிக பஸ்ஸோ, ஆளணி வசதியோ இல்லை. அப்படியான வசதி கிடைக்கும் பட்சத்தில் மேலதிக சேவையை நடத்தத் தயாராக இருக்கிறோம்.

- இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

"பருத்தித்துறை - கொடிகாமம் காலை 7.30 மணிக்கான பஸ் சேவை நிறுத்தப்பட்டதால், அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் பாதிப்பு" என்ற தலைப்பில் கடந்த 5ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்த செய்தி குறித்து அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

காலை 7.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து கொடிகாமத்திற்கு ஒரு சேவையை நடத்தும்படி வ.பி.போ.சபைக்கு எந்தக் கோரிக்கையும் கிடைக்கவில்லை என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பருத்தித்துறையில் இருந்து கொடிகாமத்துக்கு காலை 7.30 மணிக்கு எம்மால் சேவை எதுவும் நடத்தப்படுவதில்லை. தென்மராட்சிப் பாடசாலைகளில் சில தற்போது சொந்த இடங்களில் நடைபெறுவதனால், அநேகமான மாணவர்களின் கோரிக்கைக்கு இணங்க மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு காலை 7.10 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து மீசாலை (வீரசிங்கம் மகாவித்தியாலயம்) வரையும் பிற்பகல் 2.45 மணிக்கு மீசாலையிலிருந்து பருத்தித்துறை வரைக்கும் ஒரு சேவை மாணவர்களுக்கு எம்மால் நடத்தப்பட்டு வருகிறது என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சமாதான முயற்சிகள் வலுப்பெற்று வளர இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## இந்துசமயப் பேரவை பகிரங்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம்,பெப்.13

நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டும் வகையில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமாதானப் பேச்சு ஆரம்பிக்க நோர்வே மேற்கொண்டுள்ள அனுசரணை முயற்சிகள் வலுப்பெற்று, வளர்ந்து ஓங்க சகல வழிகளிலும் முழு ஒத்துழைப்பை இந்திய அரசு வழங்கவேண்டும்.

மேற்கண்டவாறு கோரும் பகிரங்கத் தீர்மானத்தை இந்து சமயப் பேரவை நிறைவேற்றியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சபையின் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அங்கு நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் சில வருமாறு:-

★ இந்த நாட்டில் கடந்தபல ஆண்டு காலமாக நடைபெற்றுவரும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக நோர்வே அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளைப் பாராட்டுவதுடன், உருவாகி வரும் சமாதானச் சூழ்நிலை வலுப்பெற்று வளர்ந்தோங்கக்கூடிய சாதகமான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுதவுமாறு சகல அரசியல் கட்சிகளையும், சகல மதத் தலைவர்களையும் யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை பகிரங்கமாகக் கோருகின்றது.

★ இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை காரணமாக நடைபெறும் போரில் இந்துக்களும் பௌத்தர்களும் அநாவசியமாக மாண்டு மடிவதைத் தடுத்து நிறுத்தக்கூடிய இறுதிச் சந்தர்ப்பமாக தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இதனை நன்கு பயன்படுத்திக்கொள்ளுமாறு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் மேன்மைதங்கிய ஜனாதிபதியையும் மாண்புமிகு பிரதமரையும் எமது பேரவை பகிரங்கமாகக்கோருகின்றது.

★ இராணுவ நடவடிக்கை ஆரம்பித்தநாள்முதல் கைதுசெய்யப்பட்டு இதுவரை நீதிவிசாரணைக்குட்படுத்தப்படாதிருக்கும் சகல இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்றும், இவர்களுடைய தற்போதைய நிலையை பெற்றோர்களுக்கு உடனடியாக வெளிப்படுத்தவேண்டுமென்றும், இவ்விதம் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள குடும்பங்களின் அன்றாட வாழ்வைத் தொடர்வதற்கு போதுமான பண உதவிகளை அரசாங்கம் உடனடியாக வழங்கவேண்டுமென்றும் எமது பேரவை இலங்கை அரசைக்கோருகின்றது.

★ நடைபெற்றுவரும் போரில் அழிக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கு வழங்கப்பட்டுவரும் உதவிகள் மிகக் குறைந்தளவாகக் காணப்படுவதால் இவ்வுதவிகளைக்கொண்டு வீடுகளைத் தக்கமுறையில் புனரமைக்க முடியாதுள்ளமையைக் கருத்திற்கொண்டு இவ்வுதவிகளை அதிகரிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை இப்பேரவை பகிரங்கமாகக் கோருகின்றது.

★ நடைபெற்றுவரும் யுத்தத்தால் பூட்டப்பட்ட அல்லது பாதுகாப்புக் காரணங்களைச் சாட்டாக வைத்து மட்டுப்படுத்தப்பட்ட முறையில் வழிபாட்டுககு அனுமதிக்கப்பட்ட சகல ஆலயங்களுக்கும் மக்கள் சுதந்திரமாகச் சென்று வழிபடக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசைக்கோருவதுடன், இதற்கு அனுசரணையாக இந்தியத் திருநாடு தமது செல்வாக்கைப் பிரயோகிக்கவேண்டும் என இப்பேரவை கோருகின்றது.

★ கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்றுவரும் போரால் பாதிக்கப்பட்ட அனைத்து இந்து ஆலயங்களையும் இந்து நிறுவனங்களையும் புனரமைப்புச் செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கோருவதுடன், குறிப்பாக இராணுவ நடவடிக்கையின் போது முதன்முறையாகப் பாதிக்கப்பட்ட செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதுடன், யாதுமற்ற ஏழைப்பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு புகலிடமாக இருந்த இந்து சமயப்பேரவை, கைதடி சைவச்சிறுவர் இல்லம் போன்றவற்றைப் புனரமைக்க ஏற்ற உதவிகளை வழங்குமாறும் இலங்கை அரசாங்கத்தை இப்பேரவை பகிரங்கமாகக்கோருகின்றது.

★ இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த நாள் முதல் பெரும்பாதிப்புக்குள்ளாக்கி சொல்லொணாத்துயரத்திற்கு உள்ளான வலி.வடக்கு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு ஏற்ற வளங்களை வழங்கி, அவர்களை சொந்த இடங்களில் குடியமர ஏற்ற நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் வலி.வடக்குப் பிரதேசம் யாழ்ப்பாணத்தின் கடல்வளமும் நிலவளமும் நிறைந்த பகுதியாகத் திகழ்வதால் இப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக ஆக்கப்பட்டுள்ளமையால் நாட்டில் பொருளாதார வளம் பாதிக்கப்பட்டுள்ளது. மற்றும் இந்துக்களின் புனித தலங்களான கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை புனித தீர்த்தம் ஆகியனவும், இப்பகுதியில் அடங்கியிருக்கின்றமையால் இவற்றைக் கருத்திற்கொண்டு இப்பிரதேசத்தில் மக்கள் சுதந்திரமாகச்சென்று குடியமரவும், இப்பிரதேசத்திற்கு மக்கள் சுதந்திரமாகச்சென்று வரவும் ஏற்ற உதவிகளை வழங்குமாறும் இலங்கை அரசை எமது பேரவை கோருகின்றது.

★ 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற தென்மராட்சிப் போரின்போது தென்மராட்சிப் பிரதேசம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் உள்ள வீடுகளும் ஆலயங்களும் வர்த்தக நிலையங்களும் முழுமையாக அல்லது பகுதியாகச் சேதமாகியுள்ளன. இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் தமது நாளாந்த வாழ்வைத் தொடர்வதில் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி, இவர்களின் நலன்களைப் பேணுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்து சமயப் பேரவை கோருகின்றது.

★ இந்துப் பிள்ளைகள் தமது மதம் சம்பந்தமான கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகவும், சமய அனுஷ்டானங்களைப் பெற்றுத் திகழ்வதற்கு ஏற்றவகையிலும் பிள்ளைகளுக்கு பயிற்றுவிப்பதற்குப் பாடசாலைகள்தோறும் இந்துசமய நெறியில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களை நியமிக்குமாறும், இப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்குவதற்கு திருநெல்வேலியில் முன்னர் நடத்தப் பட்டுவந்த சைவாசிரியர் கலாசாலையை மீண்டும் தொடக்கி, அங்கு இப்பயிற்சிகளை நடத்துமாறு அரசாங்கத்தைக் கோருவதென்றும், மேலும் எமது பாடசாலைகளில் சமயம் சம்பந்தமான கல்வியை மேம்படுத்தும் நோக்கில் கல்விக் கோட்டங்கள் தோறும் சைவசமய பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் இப்பேரவை இந்து கலாசார அமைச்சரை ஏகமனதாகக் கோருகின்றது.

★ போரின் கொடுமையால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும், குறிப்பாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் தொழில் முயற்சியை மேம்படுத்த ஏற்ற நிவாரணங்களை உடனடியாக வழங்குமாறும், அநாதைகள், விதவைகள், அங்கவீனர்களுக்கான மறுவாழவுத் திட்டங்களை உடனடியாக செயற்படுத்துமாறும் இப்பேரவை மேதகு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பகிரங்கமாகக் கேட்டுக்கொள்கின்றது.

★ நடைபெற்றுக்கொண்டிருக்கும் போர் காரணமாகக் கடற்றொழிலாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு உடனடியாக அனுமதி வழங்கவேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணங்களை அரசு தாராளமாக வழங்க வேண்டும் என்றும் இப்பேரவை கோருகின்றது.

★ தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, இந்துக்களை மதம் மாற்றும் கிறிஸ்தவக் குழுக்களின் செயற்பாடுகளை பகிரங்கமாகக் கண்டிப்பதுடன், இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்து கலாசார அமைச்சுடன் இணைந்து இம்மத மாற்ற நடவடிக்கையை நிறுத்துவதற்கான உரிய திட்டங்களை உருவாக்கவேண்டும் எனவும் இப்பேரவை தீர்மானிக்கின்றது. (ஒ)

## ஆயர் தலைமையில் அதிகாரிகள் குழு கச்சதீவு சென்றது

எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவிருக்கும் கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருப்பலி பூசைகளை ஒழுங்குபடுத்துவது குறித்து ஆராய்வதற்காக யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையிலான குழு ஒன்று அங்கு சென்று திரும்பியுள்ளது.

நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு. மொன்வெட், நெடுந்தீவு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், ஊர்காவற்றுறை கடற்படை அதிகாரி ஆகியோரும் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

இவர்கள் அங்கு சென்று திரும்பியதை அடுத்து எதிர்வரும் 18ஆம் திகதி ஆலயப் புனரமைப்புக்கென பணியாளர்கள் அங்கு செல்லவுள்ளனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம், தவக் காலத்தின் நான்காவது ஞாயிற்றுக் கிழமையில் நடைபெறுவது வழக்கமாகும். மூன்று தினங்கள் இடம்பெறும் உற்சவம் இம்முறை ஞாயிற்றுக் கிழமை - ஒருநாள் - மட்டுமே இடம் பெறுகிறது. (ம-111)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன் தொட்டிக்குரிய மோட்டர்கள், வெள்ளைக் கற்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (நண்பகல் 12 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும்) (639)

நல்ல நிலையிலுள்ள(6"x4"x1½") அளவு கொண்ட தேக்கு மரப் பலகையிலான அலுமாரி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ்.எஸ். குமாரசாமி, ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையடி, நீதிராஜா வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (574)

3 மாதம் நிரம்பிய தூய கறுப்பு நிற பொமனேரியன் ஆண் நாய்க்குட்டி, பெண் நாய் விற்பனைக்கு உண்டு. 124, கோயில் வீதி, (பொஸ்கோ சந்தி) யாழ்ப்பாணம். (572)

## வீடு விற்பனைக்கு

சுட்டுடை, மானிப்பாயிலிருக்கும் 'மங்களகிரி' எனும் வீடும் 10 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு தவராசா, பெற்றோல் செற், உருமபிராய். தொடர்பு நேரம்: காலை9.00 மணிமுதல் மாலை 4.00 வரை. (539)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (637)

## கைமாறிவிட்டது

09.02.2002 சனிக்கிழமை யாழ். பெரிய கடைப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த எனது சைக்கிளை தவறுதலாக மாறி எடுத்துச்சென்றவர்கள் தயவுசெய்து ப.கணபதிப்பிள்ளை (கணேஸ்), குட்டிப்பிள்ளையார் ஒழுங்கை, கே.கே.எஸ்.வீதி, கோண்டாவிலில் ஒப்படைத்துதவவும். (561)

## தவறிவிட்டது

உடுவிலைச் சேர்ந்த பஞ்சநாதன் றஜிதா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 835230902V), விசேட அடையாள அட்டை (இல. 0906022527) என்பன கலட்டி அம்மன் வீதியில் 10.02.2002 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல. 16, கலட்டி அம்மன் வீதி, யாழ். என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும், (566)

## தேவை

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் தேவை. தொடர்பு: வை.சிவகுமார், பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராய்.(584)

## விற்பனைக்கு

நல்லினப் பன்றிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்.

**அண்ணா பாம்**

ஸ்ரேசன் றோட், இணுவில். (C/20695)

## கோயிலாக்கண்டி கடலில் மீன்பிடிக்க மீண்டும் அனுமதி

இரண்டு வருடங்களின் பின்னர் நாவற்குழி கோயிலாக்கண்டிக் கடலில் மீன்பிடிக்க படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த 1999 டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி அன்று இடம்பெயர்ந்த இப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். இதனை அடுத்தே அப்பகுதிக் கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த சமயம் பல லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை இப்பகுதி கடற்றொழிலாளர்கள் கடலில் கைவிட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-117)

## மிதிவெடி விழிப்புணர்வு கருத்தரங்கு

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள இயங்கும் பாடசாலை மாணவர்களிடையே மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை இலங்கை முதலுதவிச் சங்க மிதிவெடி விழிப்புணர்வு பிரச்சாரப் பிரிவினரால் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது. (ம-117)

# மனமார வாழ்த்துகின்றோம்



கொய்யாத்தோட்டம் ஞானசெல்வவிநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் பிரபல சமூகசேவையாளருமான

உயர்திரு.

**கோணையா தியாகராஜா**

அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாகப் பதவிப்பிரமாணம் செய்ததையிட்டு மனமார வாழ்த்துவதுடன், எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் என்றும் இவருக்குக் கிட்டுவதுடன், இவர் பணி மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

*ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம், கலட்டிப்புலம், ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.* - பரிபாலன சபை. (580)

# G.A.Q., B.A. PART I - 2001

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரிய

**ஆங்கில வினா - விடை வகுப்புகள்**

ஆரம்பம்: 16-02-2002

G.A.Q. - 8 மணி, B.A. PART I - 11.00 மணி

(20 மணித்தியால வகுப்புகள்)

கல்விப்பொதுத் கல்லூரி பயிற்சிநெறியை முடித்துக்கொண்ட மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க B.A. PART- I (யாழ்.) விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன.

ஆரம்பம்: 23-02-2002 காலை 8 மணி.

**பேராதனை B.A.**

விரிவுரைகள் ஆரம்பம்: 23-02-2002 (9மணி)

*விவரங்களுக்கு:-*

**S.அருள்நங்கை,**
**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ். (581)

# சிப்பி தேவை

எமது சங்கத்திற்கு சிப்பி தேவைப்படுகிறது. ஒரு கிலோ கழுவிய சிப்பி ரூபா 5/- படியும், ஒரு கிலோ கழுவாத சிப்பி ரூபா 4/- படியும் கொள்வனவு செய்யப்படும். வழங்குபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து, பணத்தை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,

(C/20704) திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

# சிற்றூழியர் தேவை

எமது கல்லூரியில் பணியாற்றுவதற்கு சிற்றூழியர் ஒருவர் தேவை.

*வயதெல்லை:* 30 - 45

*கல்வித் தகைமை:* 8ஆம் வகுப்பு

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

*விண்ணப்ப முடிவு திகதி:* 22.02.2002

பதிவாளர்,

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி,

(575) 127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 31 - 01 - 1957



மறைவு 05 - 01 - 2002

## அமரர் ஐயாத்துரை கனகசபாபதி

(செல்வநாயகம்)

பாசத்தின் திருவுருவே! பாவிகளாகிவிட்டோம் நாம்
பாரினில் பந்தங்கள், பாசங்கள் பொய்யாகுமோ!

*ஓம் சாந்தி!*

அன்னாரின் நினைவாக நாளை (14.02.2002) வியாழக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: *இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.*

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி. (597) - குடும்பத்தினர்.

# இப்படித்தான் வாழவேண்டும் என்று உணர்த்தும் காலம் தவக்காலம்

**புனித திருநீற்றுப் புதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது.**

மானிட வரலாற்றில் மனிதன் இறைவன் பக்கமாகத் திரும்பி வருவதற்காக நோன்பு இருந்து, திருத்தலங்களைத் தரிசித்து, தான தருமங்கள் தாராளமாகச் செய்து, புது வாழ்வுக்குத் தன்னை மாற்றிக்கொள்வது இயல்பாக நடந்துவருகின்றது. சமயங்கள் ஒவ்வொன்றும் இந்த நல்ல முயற்சியைப் போற்றி வளர்த்து வந்திருக்கின்றன.

எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்துவரும் மக்களுக்கு இப்படித்தான் வாழவேண்டும் என்று அறிவுறுத்தும் காலம்தான் தவக்காலம் ஆகும்.

இத்தவக்காலமானது திருநீற்றுப் புதனோடு ஆரம்பமாகி, தொடர்ந்து புனிதவாரத்துப் பெரியவியாழன் மாலைவரை நீடிக்கின்றது. 40 நாள்கள் கடைப்பிடிக்கப்படும் இக்காலத்தில்; மனிதன், மனிதத்தை மதித்து, மனிதனாக, ஏன் புனிதனாக மாற அழைப்பு விடப்படுகின்றது.

நமது சமூகத்தில் தவத்தின் மூலம் பல அபூர்வ சக்திகளை, வரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற பொதுவான கருத்தும் உண்டு. ஆனால் கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில், இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்னும் பாஸ்கா நிகழ்வுகளில் இருந்து மீட்பின் சக்தியைப் பெற்றுக்கொள்ள தவம் அவசியமாகின்றது.

செபித்தல், நோன்பிருத்தல், தானதர்மம் செய்தல் போன்ற அறச் செயல்கள் தவத்தின் முக்கிய செயற்பாடுகளாக அமைகின்றன. ஆனால் இந்த அறச் செயல்கள், பிறர் பார்க்க வேண்டும் எனச் செய்யப்பட்டால் அது வெறும் சடங்கு முறைகளாக மாறிவிடும். இதனையே; இயேசு "மக்கள் பார்க்கவேண்டுமென்று அவர்கள் முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள்" (மத்:6:1)

> செல்வி செ.மேரி யூலியா
> *நற்செய்தி அறிவிப்புப் பணியகம் மானிப்பாய்.*

எனக் குறிப்பிடுகிறார்.

நமது அன்பற்ற வாழ்வால் துண்டிக்கப்பட்ட இறை - மனித உறவை மீண்டும் சீர்செய்யும் ஆன்மீகப் புதுப்பித்தலின் காலமான இத்தவக்காலத்தில், பழைய வாழ்வையும், அதற்கு ஏதுவான காரணிகளையும் விட்டு விலகி, மனந்திருந்திய ஊதாரி மைந்தர்களாக, புதுவாழ்வும், புதுப்பிறப்பும் அடைய "உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என்று எமக்கு அழைப்பு விடுக்கிறார் இப்புனித காலத்தில் - இறைவாக்கினர் யோவேல்.

*'உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்"*

(யோவேல்:213)

# கண்ணீர் அஞ்சலி



வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் பரிபாலன சபையில் பல வருடங்களாக உபதலைவராக இருந்தவரும் 1996 ஆம் ஆண்டு அம்பிகைக்கு நடைபெற்ற கும்பாபிஷேக குடமுழுக்கு விழாச் சிறப்புற நடைபெற முன்னின்று உழைத்தவரும், மகோற்சவ தினங்களில் அன்னதானம், தண்ணீர்ப்பந்தல், அர்ச்சனைக்கடை ஆகியவற்றைத் திறம்பட முன்னின்று நடத்தியவரும் ஆகிய

அமரர்

## வாதவூரார் தவச்செல்வம்

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

அஞ்சலகம், வேலணை. (560)

அஞ்சலதிபர், உத்தியோகத்தர், ஊழியர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா நல்லம்மா (சரஸ்)

அரியாலையூரைச் சேர்ந்த திருமதி நடராசா நல்லம்மா 11.02.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் நடராசா (Auditor) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி இராசரட்ணம் (புறூடி), லலிதா, திருமதி விஜயதர்மா சந்திரவதனா, திருமதி செல்வராசா றஞ்சிதமலர், திருமதி யோகதேவா லீலாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் நாலிங்கம் குணரட்ணம், திருமதி நடராசா மகேஸ்வரி, நாகலிங்கம் அமரசிங்கம், நாகலிங்கம் இராசரட்ணம், காலஞ்சென்றவர்களான திருமதி சிவகுரு பரம்சோதி, நாகலிங்கம் துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*Velu Vanapura Flats,*
*J,1/2 , Hamton Lane,*
*Wellewatha.*
*T.P. 01-592794* (577)

தகவல்:
மகள்: விஜயதர்மா சந்திரவதனா
(ஓய்வுபெற்ற ஆசிரியை,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

## சேனாதிராசா விவேகானந்தன்

*(நீர்வேலி ப. நோ. கூ. சங்க லொறிச்சாரதி)*

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா விவேகானந்தன் 10.02.2002 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா - ஞானரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் தர்சனன் (இத்தாவில்), ஆதவன் (அத்தியார் இந்துக் கல்லூரி), கிருசாந்தி, வேணுகோபன் (அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயரட்ணத்தின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2002) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (578)

தகவல்:
வி.மங்களேஸ்வரி
(மனைவி)

## யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை
## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

முன்னர் பிற்போடப்பட்டிருந்த எமது கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 15.02.2002 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(597) - அதிபர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



## உயர்திரு. சண்முகம் கதிரவேலு

*(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஓய்வுபெற்ற பொறியியலாளரும் தற்போது வட - கிழக்கு மாகாண ஊழியர்களின் ஒழுக்க விசாரணை அதிகாரியும்)*

புத்தூரைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட **திரு.சண்முகம் கதிரவேலு** அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆல் போல் விழுது பரப்பி**
**அறுகு போல் வேரூன்றி**
**ஊருக்கெல்லாம் உதவிய**
**உத்தம சீலர்**
**சமாதான நீதிவானாகி (J.P.)**
**சமூகத் தொண்டாற்றிட**
**எங்களது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!**
**வாழ்க அவர் பணி! வளர்க அவர் தொண்டு!!**

கந்தப்பிள்ளை ஆனந்தராசா
குடும்பத்தினர்,
*சந்தை ஒழுங்கை, சுன்னாகம்.* (587)

## இதய அஞ்சலி



வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் தொண்டரும், ஆலய அபிவிருத்திப் பணிகளில் முன்னின்று உழைத்தவரும் சபையின் உப தலைவருமான

### வாதவூரார் தவச்செல்வம்
அவர்கள்

திடீரென இயற்கை அடைந்தமை அறிந்து நாம் மீளாத்துயர் அடைகின்றோம்.

அமரரின் ஆன்மா அம்பிகையின் பதாரவிந்தங்களில் சாந்தி அடையப் பிரார்த்தித்து, அவரின் பிரிவால் துவளும் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்குகொள்வோமாக.

*ஓம் சாந்தி!*

- பரிபாலன சபை
வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

(582)

## கண்ணீர் அஞ்சலி



வேலணை பிரதேச செயலக சிறுவர் கண்காணிப்புக் குழு உறுப்பினரும், வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய பரிபாலன சபை உப தலைவரும், வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை உபதலைவரும், சமய, சமூகத் தொண்டரும், எல்லோரினதும் அன்புக்கு உரியவருமாகிய

### வாதவூரார் தவச்செல்வம் (J.P.)

அவர்களின் திடீர் மறைவையிட்டு மீளாத்துயரம் அடைவதுடன் அன்னாருக்கு எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் அமரரின் குடும்பத்தினருக்கு எமது இதயம் நெகிழ்ந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்,
கிராம உத்தியோகத்தர்களும்,
வெளிக்கள உத்தியோகத்தர்களும்,
சமுர்த்தி உத்தியோகத்தர்களும்

*பிரதேச செயலர்,*
*வேலணை.* (593)

## சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில்

தென்மராட்சி,பெப்.13

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை சொந்த இடத்தில் மீள இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை வளவும் சுற்றாடலும் மிதிவெடி, கண்ணிவெடி பரிசோதனைக் குழுவினரால் பரிசோதனை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து பாடசாலை மீள இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் அருகில் உள்ள சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ம-117)

## அரசுக்கு.....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியும்" என்று கூறியது.

இதுவரைகாலமும் இந்தப் புலிப் பிரதேச மக்களை இலங்கை அரசு தண்டித்துவந்தது.

உயிர்காக்கும் மருந்துகள், இவர்களுக்கு அனுப்பப்படாமல் தடைசெய்யப்பட்டிருந்தன. 4 லட்சம் பேருக்கு ஒரேயொரு மருத்துவமனை மட்டுமே செயற்பட்டது.

கட்டடப் பொருள்கள், பற்றறிகள், தீப்பெட்டிகள் ஆகியன எங்கே புலிகளுக்கு உதவிடுமோ என்ற அச்சத்தில் அவையெல்லாம் தடைசெய்யப்பட்டிருந்தன.

இலங்கை அரசின் பொருளாதாரத் தடை புலிகள் பகுதியில் பயனளிக்கவேயில்லை என்பதற்கு ஓர் உதாரணம் எமக்குக் கடைசி நாளன்று காட்டப்பட்டது.

### நேரில் பார்த்த தாக்குதல் ஒத்திகை

புலிகளின் இராணுவ அணி எங்களுக்காக ஒரு தாக்குதல் ஒத்திகை ஒன்றை நடத்திக்காட்டியது.

60 ஆண் போராளிகள், 60 பெண் போராளிகள் பயங்கரமான யுத்த விற்பன்னர்கள் இவர்கள்.

இயந்திரத் துப்பாக்கிகள் கனல் கக்கின. ரொக்கெட் லோஞ்சர்கள், மோட்டார்கள் பயன்படுத்தப்பட்டன. எல்லாமே உண்மையான குண்டுகளாக இருந்தமை என்னை வியப்படைய வைத்தது. இதுவே உண்மையான தாக்குதலாக இருந்தால் எதிரியின் பங்கு என்னவாகியிருக்கும் என்று எண்ணினேன்.

ஆனால் என்னை உண்மையில் ஆச்சரியப்பட வைத்தவர்கள் உயரத்திலே குள்ளமான அந்த இளம் பெண் போராளிகள்தான்.

### மலைக்க வைத்த பெண் போராளிகள்

போருடை கச்சிதமாக அணிந்து, நீண்ட தமது கருங்கூந்தலை தலைக்குப் பின்னால் சுற்றிக் கட்டி, பயில்வானான ஆண்கள் கூடத் தூக்கத் தயங்கும் பாரங்களைச் சுமந்தபடி கொதிக்கும் வெயிலில் கானகத்தின் ஊடாக அவர்கள் துரிதமாகப் பறக்கும் வேகம் என்னை மலைக்கவைத்தது.

### கொஞ்சும் குமரிகள்

போர் ஒத்திகை முடிந்ததும் கொலைத்திறன் படைத்த அந்தப் பெண் போராளிகள் கொஞ்சும் கன்னிகளாக மாறியதைக் கண்டேன். எங்களுக்கு இனிமையாக வணக்கம் கூறிவிட்டு தமக்குள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தபடி ஓடி மறைந்தார்கள் அந்தக் குமரிப் பெண்கள்.

புலிகள் பகுதியைவிட்டு நான் வெளியேறும்போது ஒரு கத்தோலிக்க கன்னியாஸ்திரி எம்மை வழிமறித்துக் 'கடத்த' முற்பட்டார். ஆமாம் எம்மை 'கடத்திச்' செல்ல முற்பட்டார்.

எமக்கு நேரமில்லை என்று விளக்கியும்கூட அவர் விடவில்லை. புலிகள் வட்டாரத்தைவிட்டு புறப்படும் முன்னர் உங்களை உபசரித்து வழி அனுப்புமாறு புலிகள் கூறியுள்ளதாகக்கூறி 'கேக்'குகளையும், தேநீரையும் பரிமாறினார் சகோதரி இனிஷியா என்ற அந்தக் கன்னியாஸ்திரி. ★


### இறைச்சிக்கோழி (CULLBIRDS) விற்பனைக்கு

*அச்சுவேலி கோழிப்பண்ணையில்* (CULLBIRDS) தொகையாக விற்பனைக்கு உண்டு. இவற்றைப் பெறவிரும்புவோர் 19.02.2002 ஆம் திகதிக்கு முன் *பிராந்திய கோழிப்பண்ணை, கைத்தொழில் பேட்டை, அச்சுவேலி* என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

(C-20709)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சத்தியசீலன்

*(மானிப்பாய் ப.நோ.கூ.ச. எரிபொருள் முகாமையாளர்)*

நவாலியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சத்தியசீலன் அவர்கள் 04.02.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் ஆன் (ஜெர்னி), டல்றின், தமறா, கிறியன்சி, செரோன், டிரோசன், அக்ஷா, டிவோன்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தையா - நாகம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் ஆசீர்வாதம் - ஜசிந்தா (கொழும்பு) ஆகியோரின் மருமகனும் ராணிகமலா (France), விஜயகுமாரி (நவாலி), வசந்தகுமாரி (France), தேவிமனோகரி (ஜேர்மனி), சாந்தகுமாரி (நவாலி), ஜெயகுமாரி (ஜேர்மனி), ஞானசீலன் (France), ரவிசங்கர் (Swiss), கோமதி (France) ஆகியோரின் சகோதரனும் வடிவேலு, துரைசிங்கம், ஞானசேகரம், தெய்வேந்திரம் (Germany), ஜெயக்கொடி, ஞானசேகரம், ரஞ்சன் (Swiss), ரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும் எஸ்தர் யசோதா, யோகராணி, மதியழகன் (Swiss), ரூபி (Swiss), கிரிதரன், கௌரி, வாசுகி (Canada), துஸ்யந்தன், சதீஸ், ஜானகி (Canada) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் சுரேஸ்குமார், பேபியகிலா, செல்வகுமார், அனுரா, கேமமாலினி (France), பிரதீபன் (Swiss), பிரபாகரன் (France), பிரபாஸ்கரன், ஜெயமிலா (Germany), ரேணுகா, சுனிற்றா, கோபிகிருஸ்ணன் (நவாலி), பெனோடிரோசன் (Germany), கஜன், கபிலினி (Germany) ஆகியோரின் மாமனாரும் நடராசா - செல்லம்மா (Canada) ஆகியோரின் பெறாமகனும் நடராசா - லீலா (India) ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.02.2002) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு தாவடியில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஞானசீலன் (சகோதரன்)
(France - வவா)

(568)

## தவசி கதிரவேலு

புத்தூர் வடக்கைச் சேர்ந்த தவசி கதிரவேலு நேற்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தவசி தேனி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாலன் - நாகம்மா தம்பதியினரின் மகளான தங்கமுத்துவின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (நோர்வே), பாலேந்திரன் (நோர்வே), பாலசரஸ்வதி (கொழும்பு), கிருஸ்ணபாபு (ஜேர்மனி), சுதாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சகுந்தலா (ஜேர்மனி), கங்கேஸ்வரி (லதா - நோர்வே), செ.சிவராசா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷாந்த் (நோர்வே), விதுஷன் (கொழும்பு), துவாரகா (கொழும்பு), தாரணிகா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2002) புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கிந்துசிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*சுன்னாகம் வீதி,*
*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.* (596)

தகவல்:
தங்கமுத்து (மனைவி)
ரீ.எஸ்.சிவலிங்கராசா (பெறாமகன்)

## கந்தையா சின்னத்துரை

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை நேற்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, சின்னத்தம்பி, ஆறுமுகம் மற்றும் சோதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் ராஜேஸ்வரி (கனடா), விமலாதேவி, சந்திராதேவி (கனடா), இந்திராதேவி, காலஞ்சென்றவர்களான கமலாதேவி, புஸ்பலதா மற்றும் கஜமுகதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராசா, ஞானசேகரம், ஸ்ரீதங்கராசா (கனடா), நவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயக்குமார், விஜிதா, ஜெயதீபன், சசீந்திரன் (கனடா), கேயவர்த்தனன் (லண்டன்), கயந்தன் (கனடா), விதர்ஷன், விசால் ஆகியோரின் பேரனும் நிதர்ஷன், மிதுர்ஷன் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2002) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இந்தன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*சிறுப்பிட்டி கிழக்கு,*
*நீர்வேலி.* (590)

தகவல்:
ஜெயக்குமார் (பேரன்)

## கதிரேசு தங்கவேல்

*(ஓய்வுபெற்ற Rommiller, சீமெந்துக் கூட்டுத்தாபனம்)*

காங்கேசன்துறை மாங்கொல்லையினைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வதிவிடமாகவும் தற்போது வெள்ளவத்தையினை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு தங்கவேலு அவர்கள் 12.02.2002 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - திருப்பதி தம்பதியினரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம்பிள்ளை - இராசம்மா தம்பதியினரின் மூத்த மருமகனும் நாகேஸ்வரியின் (ஆச்சி) அன்புக் கணவரும் விஜயகுமார் (பிரான்ஸ்), புஸ்பலதா (சுவிஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (B.B.A. Hons.), செல்வக்குமார் (இறுதிவருட மாணவன், முகாமைத்துவத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜி (பிரான்ஸ்), கலானந்தன் (சுவிஸ்), சுவர்ணா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மாறன், சிந்துஜா, செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் கனத்தை இந்து மயானத்தில் 12.02.2002 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40, சம்பியன் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (599)

தகவல்:
செல்வக்குமார் (மகன்)
(இறுதிவருட முகாமைத்துவ மாணவன்)

சகல சுருட்டு உற்பத்தியாளர், தொழிலாளர்களுக்கும் ஒரு பணிவான வேண்டுகோள்!

## வடமாகாண சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

சுருட்டுத் தொழிலாளர்களின் கஷ்டமான நிலையைப்போக்கி அதை நிவர்த்தி செய்யும் முகமாக 02.02.2002 முதல் 100 சுருட்டுக்கள் சுற்றுவதற்கான கூலியை 40/= ரூபாவாக அதிகரித்து வழங்குமாறு துண்டுபபிரசுரமூலம் கேட்டிருந்தோம்.

இதனை உற்பத்தியாளர்கள் கவனத்திலெடுக்காது அலட்சியம் செய்து வருகின்றனர். ஆகவே 15.02.2002 வெள்ளிக்கிழமை முதலாக தொழிலுக்கு போகாது எமது கோரிக்கைக்குச் செவிசாய்த்து அவர்கள் நடவடிக்கை எடுக்க, எம்முடன் ஒத்துழைக்குமாறு சங்கத்தின் சகல தொழிலாளர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கினறோம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை. (600) - செயலாளர்.

---

Jaffna College Institute of Technology.
Vaddukoddai.

## VACANCIES

1. **Clerk Typist**
   Qualification:- G.C.E. (A/L) with minimum experience of one year in Clerical Work. Typing skills with Computer Literacy preferable.
2. **Security Guards**
   Please bring References.

**Short listed candidates will be called for an interview.**

**Apply before February 18th, 2002. to**
Director,
Jaffna College Institute of Technology,
Vaddukoddai.

E-mail-JCIT @ sltnetlk
Phone No.: 070-213139. (C/20716)

---

## கேள்வி அறிவித்தல்

புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை, கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை

01. யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அமைந்துள்ள வடக்கு - கிழக்கு மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரியினால் அச்சுவேலி சுற்றியற் கூறில் வெளிநோயாளர் பிரிவு (தரைமட்டம்) நிர்மாணிப்பதற்கான கேள்விகள் 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆறாம் திகதி புதன் முற்பகல் 10.00மணிவரை இத்திணைக்களத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகத் திறக்கப்படும்.
02. நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம் -7 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப்பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையோராவார்.
03. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர், நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப்புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள பிரதம எந்திரி அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணமாக ரூபா 3000/= ஐயும், மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 750/= ஐயும் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பொது 172 பற்றுச் சீட்டுக்களை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமிடத்து, 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்காம் திகதி திங்கள் பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒரு தொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாண மாகாண கட்டடங்கள் திணைக்கள நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சொ.அமிர்தலிங்கம்
தலைவர்,
அமைச்சு கேள்விச் சபை.

*புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலத்துறை கட்டடங்கள், மகளிர் விவகார அமைச்சு,*
*வடக்கு – கிழக்கு மாகாணம்,*
*உட்துறைமுக வீதி,*
*திருகோணமலை.*
*திகதி. 08.02.2002* (C/20711)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சக உத்தியோகத்தர்
திரு.பொ.சிவநேயன் (பொது சுகாதார பரிசோதகர் - சங்கானை)
அவர்களின் அன்புத் தந்தையார்

**க.பொன்னம்பலம் (B.A.)**

அவர்கள் 11.02.2002 இல் இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சுகாதார வைத்திய அதிகாரி, உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.
*சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய்.*
(580)

---

We Serve

## கண்ணீர் அஞ்சலி

தீவக லயன்ஸ் கழக இயக்குநர் சபை உறுப்பினரும்,
சமாதானநீதிவானும், சிறந்த சமூக சேவையாளரும்

**லயன் வாதவூர் தவச்செல்வம்**

(வேலணை மேற்கு)

மறக்கவொண்ணா சேவைகளால் அரிமாக்கழகம்
மக்களிடம் பணியாற்ற இணைந்த தொண்டன்
பெருமை மிகு தீவகத்தின் புதல்வன் எங்கள்
தவச்செல்வம் பிரிவுக்கு அஞ்சலி செய்தோம்.

(658) தீவக லயன்ஸ் கழகம்.

---

## சமய சந்நிதியில்

நெடுந்தீவு,பெப்.13

நெடுந்தீவு மேற்கு கரமத்தை கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறும்.

பத்தாம் நாளான மாசி மகத்தின் போது தேர்த்திருவிழாவும் மகேஸ்வரபூசை, தீர்த்த உற்சவம் என்பனவும் இடம்பெறும்.

மேற்படி ஆலயத்தின் திருவிழாக்காரர்களில் ஒருவரான காலஞ்சென்ற திருமதி குமாரசாமி அவர்களின் நினைவாக புதிய மயில் வாகனம் ஒன்றை அவரது குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். குறிப்பிட்ட மயில் வாகனம் இந்த வாரத்தில் யாழ்நகரில் இருந்து இங்குவந்து சேரவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர் சி.தில்லையம்பலம் தெரிவித்தார். (ம-111)

## நேற்று மூவரின் சாட்சியங்கள் பதிவு

நாரந்தனையில் தமிழர் கூட்டமைப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றும் யாழ்நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இளைப்பாறிய அதிகாரியான நாகநாதி தர்மலிங்கம் , கார்ச்சாரதிகளான கந்தையா இரத்தினம், சந்திரராசா கணேசலிங்கம் ஆகியோரது சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டன. மீண்டும் நாளை வியாழக்கிழமைக்கு வழக்கு விசாரணையை நீதிவான் இ.த.விக்னராஜா ஒத்திவைத்தார். இந்த வழக்கு விசாரணையில் இதுவரையும் 10 சாட்சிகளின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்னும் 22 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவேண்டியுள்ளன. (ஐ-10-8)

## வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,பெப்.13

கல்வி அமைச்சின் நூறுநாள் செயற்றிட்டத்தின் கீழ் இவ்வாண்டில் இருந்து 1ஏபி, 1சி பாடசாலைகளில் அமுல் செய்யப்படவுள்ள தகவல் தொழில்நுட்பக் கல்விப் பாடம் தொடர்பான நான்குநாள் வழிகாட்டல் செயலமர்வு நாளை காலை 9 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பாடசாலைகளின் அதிபர்களையும் தகவல் தொழில்நுட்ப அறிவுள்ள இரு ஆசிரியர்களையும் இந்தச் செயலமர்வில் பங்குபற்றுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராசா கேட்டுள்ளார். (ஐ-3)

---

**DISSERTATION BINDING**

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமையக் கட்டிக் கொடுக்கப்படும். *இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ.350/-.*

**பாரதி பதிப்பகம்**
*430, காங்கேசன்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* T.P. 3081 (C/20718)

---

**யாழ்.பல்கலைக்கழகம்**

**பட்டமளிப்பு விழா - 2002**

*வீடியோ, புகைப்படம் பிடித்தல்*

யாழ்.பல்கலைக்கழகத்தின் 21 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2002.03.16ஆம் திகதி நடைபெறவுள்ளது. இவ்விழா நிகழ்வை வீடியோப்படம் எடுப்பதுடன், 700 புகைப்படங்கள் வரை (4R அளவுள்ள கலர்புகைப்படம்) எடுக்கவேண்டியுள்ளதால் தகுதி வாய்ந்த வீடியோப் படப்பிடிப்பாளர்கள், புகைப்படப்பிடிப்பாளர்கள் தங்களது விலைக்கூற்றை 2002.02.20ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ, "உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். பட்டமளிப்பு விழா நிகழ்வின்போது வீடியோப் படப்பிடிப்பாளர் மின்பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) கொண்டுவருதல் வேண்டும்.

பதிவாளர்
*யாழ்பல்கலைக்கழகம்*
*12.02.2002* (C/20710)

---

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் தரம் III, II, I இற்கான மத்தியஸ்தர் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 15ஆம், 16ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

ஏற்கனவே தரம் IIIஇற்கு விண்ணப்பித்தவர்களும் மேலும் புதிதாக தரம் II, Iஇற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களும் *நாளை 14ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர்* யாழ்.உதைபந்தாட்ட லீக் /பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செயலாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(663) - யாழ்.உதைபந்தாட்ட லீக்.

---

## ஆழ்ந்த அஞ்சலி

யா/ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலய ஆசிரியை
திருமதி தவநாயகி கனகரத்தினம்
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் ஆறுமுகம் சிவசம்பு**

அவர்களின் பிரிவுத்துயரில் நாமும் கலந்து
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் நலன்புரிக் கழகம
(595) யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

---

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் வாதவூர் தவச்செல்வம் (ஜே.பி.)**

வேலணையைத் தாயகமாய் நேசித் தன்பாய்
வேண்டியே பல பணிகள் நிறைவாய்ச் செய்தே
ஆலமரம் என எவர்க்கும் நிழலை ஈந்த
அண்ணலே! வாதவூர் தந்த மைந்தா!
சால உயர் தவச்செல்வ மேயும் மேன்மை
சமாதான நீதிவா னாக்கிற் றெம்மை
ஓலமிட வைத்தமர ராணீர் ஐயா!
உம் நினைவை என்றென்றும் மறவோம் நாமே!

எமது சபையின் கட்டட ஒப்பந்தகாரர் அமரர் வா.தவச்செல்வம் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எங்கும் எழில் வீசும் நயினை ஸ்ரீ நாகம்மையின் பாதாரவிந்தங்களை இறைஞ்சி வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*தலைவர், உப தலைவர், செயலாளர்,*
*உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.*
*வேலணை.* (C/20714) **வேலணை பிரதேச சபை.**

---

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சுப்பிரமணியம் (மணியம்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், தம்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் 11.02.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் அன்னமுத்து தம்பதிகளின் ஏகபுதல்வனும், பாலாமணியின் அன்புக் கணவரும் புவனேஸ்வரியின் அன்புச் சகோதரரும், செல்வச்சந்திரன், சிவகரன் (பிரான்ஸ்) அகிலச்சந்திரன், பேரின்பன், பாலசுரபி(ஜேர்மனி), அமுதசுரபி ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதி, உமா(கொழும்பு), பத்மலோஜினி (கிளிநொச்சி), சிவசுந்தரம்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், டனோஜன், வினோஜன், டினோஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
*86, கலட்டி அம்மன் வீதி,* செல்வச்சந்திரன் (மகன்)
*யாழ்ப்பாணம்.* (657) (சுழிபுரம்)

### கோவிந்தபிள்ளை முருகேசு

*(முன்னாள் சைக்கிள் கடை உரிமையாளர்)*

தும்பளை மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா, கோயில் புதுக்குளத்தில் வசித்துவந்தவருமான கோவிந்தபிள்ளை முருகேசு அவர்கள் நேற்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் (குண்டுமணி பரியாரியார்), வீரசிங்கம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், மனோன்மணி ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் பாசமிகு தகப்பனாரும் சிவபாதசுந்தரத்தின் மாமனாரும், கலாநிதி சிவராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர், பௌதிகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), பாலமுரளி (வவுனியா), ஜெயராஜன் (**Instructor** - கணனி விஞ்ஞானத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), சிவநேசன் (வசந்தன் - வன்னி), ரமணி, நளாயினி (வவுனியா) ஆகியோரின் பேரனும் சஜிஷனின் பூட்டனும் ராஜரட்ணத்தின் (வவுனியா) சிறிய தகப்பனும், கமலாம்பிகையின் (வவுனியா) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2002) புதன்கிழமை வவுனியா, கோயில்குளம் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*சாஸ்திரியார் ஒழுங்கை,* - சி.ஜெயராஜன்
*தும்பளை, பருத்தித்துறை.* (659) (பேரன்)

# கைகலப்பில் பொலீஸார் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.சிறைச்சாலையில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் ஒருவருக்கும் சிறைக்காவலர் ஒருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது. இதனால் பொலீஸார் ஒருவர் சிறு காயங்களுக்குள்ளானார்.

யாழ்.பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த டீ.ஏ.குமாரசிங்க (வயது 33) என்ற பொலீஸாரே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

(ஐ-9)


HAPPY BIRTHDAY

பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
சிவானந்தன் - சுனிற்றா
தம்பதிகளின் செல்வப் புதல்வர்களான

செல்வன் சிவானுஜன் - 3 ஆவது பிறந்தநாள்

செல்வன் சிவருஜன் - 2 ஆவது பிறந்தநாள்

விஷு வருடம் இன்று 13-02-2002 புதன்கிழமையும், விஷு வருடம் 24-02-2002 ஞாயிறு அன்றும் தமது இல்லத்தில் தங்கள் பிறந்த நாள்களை வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், ஹொலண்டில் வசிக்கும் மாமா, பூட்டி, பூட்டன், ஆகியோர் சிவானுஜன், சிவருஜன் ஆகிய இருவரையும் வீரமாகாளி அம்பாள், நல்லூர்க் கந்தன் ஆகியோரது அருள்பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்

சிவலிங்கம் மோட்டோர்ஸ்,
77, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 021-3212 (664)

தகவல்:
அப்பா
(சிவானந்தன்)


## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் – இலங்கை

### யாழ்ப்பாணம்.

10.02.2002 ஞாயிற்றுக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற மஹா சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக செயற்குழு உறுப்பினர்கள் விவரம்.

தலைவர் - பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள், வல்வெட்டித்துறை.

உபதலைவர்கள் - (1) பிரம்மஸ்ரீ க.மகாகணபதீஸ்வரக்குருக்கள், வண்ணார்பண்ணை.
(2) பிரம்மஸ்ரீ செ.பரமானந்தக்குருக்கள், இணுவில்.

பொதுசெயலாளர்: பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகரசர்மா, கோப்பாய்.

உபசெயலாளர்: பிரம்மஸ்ரீ கலாதரசர்மா, நீராவியடி.

பொருளாளர்: பிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்தக்குருக்கள், இணுவில்.

**செயற்குழு உறுப்பினர்கள்**

பிரம்மஸ்ரீ சா.சோமதேவக் குருக்கள், நீர்வேலி.
பிரம்மஸ்ரீ ரவிபாஸ்கரக் குருக்கள், அராலி.
பிரம்மஸ்ரீ ச.ஸ்ரீதரசர்மா
பிரம்மஸ்ரீ க.கேதீஸ்வரக் குருக்கள், உடுப்பிட்டி.
பிரம்மஸ்ரீ வி.நாகேஸ்வரக் குருக்கள், சிவலிங்கப்புளியடி/யாழ்.
பிரம்மஸ்ரீ பா.முரளிதரக் குருக்கள், யாழ்ப்பாணம்.
பிரம்மஸ்ரீ ஸ்ரீனிவாச நாகேந்திரக் குருக்கள், புங்குடுதீவு.
பிரம்மஸ்ரீ ச.சிவசுப்பிரமணிய குருக்கள், கந்தர்மடம்/யாழ்.
பிரம்மஸ்ரீ மா.சோமசுந்தரக் குருக்கள், சுன்னாகம்.
ஆகியோர் சபையினரால் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைமைச் செயலகம்,
இல. 74, பிறவுன் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (661)

பிரம்மஸ்ரீ கா.சந்திரசேகர சர்மா,
பொதுச் செயலாளர்.

## அறிக்கை வரும்வரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,பெப்.13

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரில் 6 பேர் தொடர்பான வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் எடுக்கப்பட்டது.

செல்வராசா சதீஸ், பாண்டியன் செல்வராசா, சேதுபதி சதீஸ்குமார், சேதுபதி பாக்கியலட்சுமி, சுப்பிரமணியம் சிவநேசன், சண்முகநாதன் குமணன் ஆகியோர் தொடர்பான வழக்கே இவ்வாறு எடுக்கப்பட்டது.

இவர்கள் தொடர்பான சட்டமா அதிபரின் அறிக்கை வரும்வரை இவர்கள் அனைவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதிவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.(ஐ-10)

## குடும்பப் பெண் மரணம்!

யாழ்ப்பாணம்,பெப்.13

மூன்று நாள்கள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த தர்மராசா விஜயவதி (வயது 40) என்ற குடும்பப் பெண்ணே மரணமானவராவார்.

கோப்பாய் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற இவர் காய்ச்சல் குணமாகி நேற்று முன்தினம் - மூன்றாம் நாள் - வீடு சென்றதாகவும், நேற்று நண்பகல் உணவு அருந்தியபிறகு திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-15)

## திருக்குறள் போட்டி

கோப்பாய்,பெப்.13

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான திருக்குறள் எழுத்துத் தேர்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தரம் 3 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ-72)


**நாகம்ஸ்** சுன்னாகம்
அனேக ரசிகர்களின் வேண்டுகோளிற் கிணங்க 15.02.2002 வரை
விஜய், பூமிகா, நடித்த
**பத்ரி** (சினிமா) (592)
காட்சிகள்: 11.00, 2.00 (புதிய நேரம்)
16.02.2002 முதல் **தவசி**

**நிறஞ்சனாஸ்** சங்கானை
முரளி, தேவயானி, ரம்பா நடித்த
**ஆனந்தம்** (C-20572)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30

**ராஜா** யாழ்ப்பாணம்
அஜித், ஜோதிகா, விவேக் நடிப்பில்
**பூவெல்லாம் உன் வாசம்** (C/20871)
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.)

**லொயலாஸ் கல்யாண மண்டபம்**
உங்கள்
மங்களகரமான வைபவங்கள், இன்னிசை நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள்,
அரங்கேற்றங்கள், கலைநிகழ்ச்சிகள் ஆகிய நிகழ்வுகளுக்கும்
திருமணங்களுக்கான உணவு வகைகள், சைவ, அசைவ புரியாணி வகை உணவுகளுக்கும்
சிற்றுண்டி வகைகளுக்கும் குளிர்பான வகைகளுக்கும் அத்துடன் குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ், திருமணக் கார் உட்பட சகல வசதிகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:
**லொயலாஸ் கல்யாண மண்டபம்**
இல.59, சென்.பற்றிக்ஸ் வீதி (சம்பத்திரிசியார் கல்லூரிக்கு முன்பாக),
யாழ்ப்பாணம்.
தொடர்பு கொள்ள: 2110, 3352.
"எங்கள் சேவை உங்கள் தேவைக்கே"
(552)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வராணி சிதம்பரநாதன்

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் இராஜ வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வராணி சிதம்பரநாதன் நேற்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - இராசமணி தம்பதியினரின் அன்பு மருமகளும், சிதம்பரநாதன் அவர்களின் அன்பு மனைவியும், சர்மிளா (ஜேர்மனி), சசீலா (ஜேர்மனி), சுமங்கலா, சயந்தன் (கணனிப் பிரிவு - உதயன் நிறுவனம்), சுரேக்கா (வைத்தீஸ்வராக் கல்லூரி - 2003 கலைப் பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவராசா (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், இலக்கியாவின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜ வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (C/20719)

தகவல்:
சோ.சிதம்பரநாதன்
(கணவர்)

## கந்தப்பு தாமோதரம்பிள்ளை

அம்மன் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த கந்தப்பு தாமோதரம்பிள்ளை அவர்கள் நேற்று (12.02.2002) செவ்வாய்க்கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தப்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், சிந்தாமணிதேவி (கொழும்பு), முருகதாஸ் **(London)**, தேவதாஸ் (**Thas Hardwares**, வவுனியா), தவராசா (கிளிநொச்சி), ரகுபதி **(Canada)**, தனபால் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கிளிநொச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*55ஆம் கட்டை,*
*கிளிநொச்சி.* (668)

தகவல்:
புவனேந்திரன்
(மருமகன்)

## கந்தசாமி இரவீந்திரன்

*(முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர் - சிமெந்துத் தொழிற்சாலை - காங்கேசன்துறை, புத்தளம், கொழும்பு உரக்கூட்டுத்தாபனம், இரசாயனவியல் பொறியியலாளர் - கட்டார்)*

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி இரவீந்திரன் 09.02.2002 சனிக்கிழமை கட்டாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாதஸ்வரவித்துவான் மாவிட்டபுரம் எஸ்.கே.இராஜா - காலஞ்சென்ற பாலாம்பிகை ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற இணுவையூர் நாதஸ்வரவித்துவான் என்.ஆர்.கோவிந்தசாமி - தனபாக்கியம் ஆகியோரின் மருமகனும் பத்மலோஜனாவின் அன்புக் கணவரும் பாலசிந்துஜா, ஆரணி, தர்ஷனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுப்புலஷ்மி (கனடா), நரேந்திரன் (இ.போ.ச. - கோண்டாவில்), நிமலவாசினி (கொழும்பு), கமலாசனி (கனடா - முன்னாள் உதவி விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2002) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*187/5, கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.* (666)

தகவல்:
க.நரேந்திரன்
(சகோதரன்)

## அமரர் வாதவூர் தவச்செல்வம் (J.P.)

*(உரிமையாளர் - சாய்ராம் கட்டட ஒப்பந்தகாரர், சாய்ராம் தொலைத் தொடர்பகம் - வேலணை, நிராவியடி. -*

*வேலணை மேற்கு கிராமோதய சபைத் தலைவர், வேலணை மேற்கு கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர், வேலணை மேற்கு சிற்பனை முருகன் ஆலய பரிபாலனசபை உபதலைவர், வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலனசபை உபதலைவர், கந்தர்மடம் ஆத்திசூடி விநாயகர் ஆலய பரிபாலனசபை உபதலைவர், வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க உபதலைவர், தீவக மெய்வன்ஸ் கழக இயக்குநர் சபை உறுப்பினர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க ஆயுள்கால உறுப்பினர்.)*

வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வாதவூர் தவச்செல்வம் 07.02.2002 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வாதவூர் - அன்னம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - காமாட்சி தம்பதிகளின் மருமகனும் புஸ்பகாந்தியின் அன்புக் கணவரும் விஜிதா **(B.A.)**, வினோதா (ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சிற்பரன் (மொரட்டுவ பல்கலைக்கழகம்), செந்தூரன், டயானா (பல்கலைக்கழகம், கொழும்பு) ஆகியோரின் அருமைத் தந்தையும் மாதவனின் (பொறியியலாளர் **Sierra**) மாமனாரும் றோஜித்தின் பாசமிகு பேரனும், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான வரக்காப்பொலை அருணா பீடி உரிமையாளர்களான அருணகிரி **(J.P.)**, செல்வநாயகம் மற்றும் மகாலட்சுமி, வரதலட்சுமி (கனடா), காலஞ்சென்ற திருச்செல்வம் (உரிமையாளர், யுனிக் குரோசறி - காலி) மற்றும் அருட்செல்வம் (உரிமையாளர், **N.S.P.** ஸ்டோர்ஸ் - சென்ஜோன்ஸ் வீதி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற தியாகராஜா (தியாகராஜா அன் சன்ஸ், காலி) மற்றும் நாகலிங்கம் (**K.R.**லிங்கம் மில், நீராவியடி), ராசதுரை (கனடா), திலகவதி (கனடா), பாலாம்பிகை (கனடா), தவமணி (கனடா), புவனேஸ்வரி (கொழும்பு), காலஞ்சென்ற யோகலட்சுமி மற்றும் ரதிதேவி (கனடா), சிவகாந்தி (கொழும்பு), பானுமதி (ஆசிரியை), மனோகரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (செயலாளர், தமிழ் ஆசிரியர் சங்கம்) மற்றும் அம்பலவாணர் (ஓய்வுபெற்ற அஞ்சல் கணக்காய்வாளர், கனடா), மன்னியசிங்கம் (சாந்தி மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), கனகநாயகம் (விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), லோகநாதன் (கனடா) ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேலணை அம்பலவி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*74/12, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (667)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமகன்.

# மூதூருக்கு அமைச்சர் விஜயம்!

வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் திருகோணமலை மாவட்டத் தில் மூதூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நேற்று மீண்டும் சென்றார்.

திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜங்கரனுடன் பேச்சுக்களை நடத்திய அமைச்சர் நேற்று மாலை அங்கிருந்து கொழும்பு திரும்பினார்.

இருவாரங்களுக்கு முன்னர் அந்தப் பகுதிக்குச் சென்ற அமைச்சர் அங்குமேற்கொள்ளவேண்டிய அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

(ஐ-3-9)

## இனப்பிரச்சினையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்தியா அச்சமயம் பிரச்சினையைச் சரியாகக் கையாளவில்லை. இப்போது வேறு ஒரு அரசு அங்கு பதவியில் இருக்கிறது. அது வித்தியாசமான நிலைப்பாட்டைக் கையாள வேண்டும். கடந்த காலத்தை நாம் ஆராய்ந்துகொண்டிருப்போமேயானால் எந்த ஒன்றையும் தீர்க்க முடியாமற் போய்விடும்" - என்று தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ஐ-3)

## கண்ணிகளை அகற்றும் பணி பூர்த்தி

யாழ் - கண்டி நெடுஞ்சாலையில் தமது கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் முழுவதும் அகற்றப்பட்டு விட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

## கண்ணிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கத் தேவையான பொருள்களை எடுத்துவர புனர்வாழ்வு அமைச்சு கப்பல்களை வாடகைக்கு அமர்த்தவிருககின்றது. தனியார் வர்த்தகர்களும் இக்கப்பலில் பொருள்களை எடுத்துவர அனுமதிக்கப்படும்.

* ப.நோ.கூ.சங்கங்களுக்குத் தேவையான பொருள்களின் விவரங்களைத் தந்தால் எமது அமைச்சு கபபல் மூலம் அந்தப் பொருள்களை எடுத்து வந்து யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கும்.
* யாழ்ப்பாண உற்பத்திப் பொருள்களுக்கு வெளிமாவட்டங்களில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன் வர்த்தக கண்காட்சி ஒன்று நடத்தப்படும்.
* புத்தாண்டு தினத்தன்று யாழ்ப்பா ணத்தில் கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படும். இந்தியக் கலைஞர்களும் அதில் பங்கேற்பர். (ஐ-3)

## உயர்நீதிமன்றின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் உயர்நீதிமன்றம் அந்தத் தீர்ப்பை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அந்தரங்கமான முறையில் தெரிவிக்க வேண்டும்.

நீதிபதிகள் எஸ்.டபிள்யூ.பி. வடுகொடப்பிட்டிய, டி.பி.எஸ். குணசேகரா, அமீர் இஸ்மாயில் ஆகியோர் கொண்ட உயர்நீதிமன்ற 'பெஞ்' இன்று இது குறித்து முடிவு எடுக்கும்.

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திவைக்குமாறு தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு விடுத்துள்ள கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு சட்ட அதிகாரம் அற்ற நிலையில் இருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு -

அதற்காக மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்வதாக உறுதியளித்திருப்பது தெரிந்ததே.

இந்த ஏற்பாட்டின்படி -

ஏற்கனவே விடுக்கப்பட்ட தேர்தல பிரகடன அறிவிப்பையும், அதன்கீழ் ஏற்கப்பட்டுள்ள நியமனப்பத்திரங்களையும் செல்லுபடியற்றதாக்கும் புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அரசு முடிவு செய்துள்ளது.

இந்தத் திருத்தச் சட்டமூலம் தொடர்பாகவே உயர்நீதிமன்றத்தின் கருத்தை அறிய ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (ஐ-9)

## பயணிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய நடைமுறை தொடர்பான உத்தரவுகள் எவையும் சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து கிடைக்கவில்லை என்று 'ஹெலி ரூர்ஸ்' நிறுவன சேவை அதிகாரி பிரேமவர்த்தன தெரிவித்தார்.

பயண அனுமதிமுறை நீக்கப்பட்டு விட்டது என்ற பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பைக்கேட்டு முண்டியடித்துக் கொண்டு பயணச்சீட்டுப் பெறச் சென்றவர்கள் நேற்று ஏமாற்றத்துடன் திரும்பினர். (ஐ)

## ஆஸி.அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுவருகிறார்கள். இவர்களை விடுவிக்க உறவினர்கள் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டதை அடுத்து கைதான அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் சென்ற குடியேறிகள் தங்களை தாயகத்துக்குத் திருப்பி அனுப்ப வேண்டாமென்று கோரி அங்கு போராட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## சட்டவிரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் குற்றச் செயல்கள் மிக வேகமாக அதிகரித்து வருவதற்கும் -

தேர்தல் காலத்தில் வன்செயல்கள் பெரிய அளவில் தலையெடுப்பதற்கும் -

இத்தகைய சட்டவிரோத ஆயுதங்கள் புழக்கத்தில் இருப்பதே காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இராணுவத்தை விட்டு தப்பியோடிய ஆயிரக்கணக்கான படையினரின் கைகளிலும் இத்தகைய ஆயுதங்கள் உள்ளன.

சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிப்பதற்கு கால அவகாசத்தை அரசு வழங்கியிருந்த போதிலும் அக்காலப் பகுதிக்குள் ஒரு துப்பாக்கி கூட மீளக் கையளிக்கப்படவில்லை. இதனை அடுத்தே ஐ.நா.ஆயுதக் களைவுப் பிரிவின் உதவியை அரசு நாடியிருக்கிறது. (ஐ-9)

## கபினெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரசிங்க, கருணாசேன கொடிதுவக்கு, ராஜிதசேனரத்ன, ரவிகருணாநாயக்க, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பி.சந்திரசேகரன், மிலிந்த மொறகொட ஆகியோரே இந்த ஏழு அமைச்சர்களுமாவர்.

இதற்கிடையில் விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு சமுர்த்தி அமைச்சும் வழங்கப்படவிருக்கிறது.

அவர் இன்று சமுர்த்தி அமைச்சராகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## புரிந்துணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகள், மீன்பிடித் தடையை எந்த அடிப்படையில் முற்றாக நீக்குவது என்பனவற்றிலேயே பூரண உடன்பாடு காணவேண்டியிருககிறது.

அனேகமாக தற்காலிக போர் நிறுத்தம் முடிவடையும் எதிர்வரும் 24ஆம் திகதிக்குள் எல்லாம் சரியாக, நிரந்தர போர்நிறுத்தத்துக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடும் வாய்ப்பு ஏற்படும். என்று பாலசிங்கம் நம்பிக்கை தெரிவித்தார்.

அது நடப்பதற்குச் சற்றுப் பிந்துமானால் தற்காலிக போர்நிறுத்தம் நீடிக்கப்படுமா என்று கேட்டபோது -

"இரு தரப்பிலும் நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் முயற்சிகள் நடக்கின்றன. அதை ஏற்படுத்துவதற்கு அவசியமான எதையும் செய்யாமல் விடமுடியாதே" - என்றார்.

இதுவரை நடைபெற்ற பேச்சுக்களின் பெறுபேறு குறித்து விடுதலைப் புலிகளின் தலைமையுடன் கலந்து பேசி - கருத்தறிந்து - அதன் விவரங்கள் இன்னும் ஒரு வாரத்தினுள் நோர்வே குழுவுக்கு அறிவிக்கப்படும். அதன்பின் நோர்வே குழு இலங்கை செல்லும். அரசுடன் கலந்துபேசும். அதன் பின்னரே இறுதிக் கட்டம் அடையப்படும். எல்லாம் வெற்றி அளித்து நல்லது நடக்க வேண்டும் என்பதே புலிகளின் விருப்பம் - இவ்வாறு பாலசிங்கம் தெரிவித்தார். (ஐ)

# JAFFNA CENTRAL COLLEGE

OLD BOYS ASSOCIATION - COLOMBO BRANCH

### JCC SCHOLARSHIP AWARD - 2001

The Colombo Branch of the Old Boys Association is happy to announce that the following twentyfour students of Jaffna Central College have been selected for the Award of their Scholarship. Of this, six students belong to Advanced level I, twelve students belong to Advanced level II while six students belong to the University Education categories.

Individual letters to the awardees have been despatched and first payment shall be effected once their letters of consent are received by the Association.

### LIST OF SCHOLARSHIP AWARDEES - 2001

*Advanced level 1*

JSA 34 N.Kantheepan
JSA 35 S.Sureskumar
JSA 36 T.Iyankaran
JSA 37 Sivasothy Stanley
JSA 38 A.Pavitharan
JSA 40 S.Thayatharan

*Advanced level 2*

JSA 1 P.Pratheepan
JSA 2 N.Kavatheepan
JSA 3 N.Akilanath
JSA 4 P.Thananjeyan
JSA 5 K.Vijayakumar
JSA 6 K.Sivanesan
JSA 7 B.Jayanthapavan
JSA 8 T.Venkadesan
JSA 9 A.J.Densing
JSA 10 Y.Thananjeyan
JSA 11 S.Sayanthan
JSA 12 S.Manotheepan

*University*

JSA 13 T.Sudharshan
JSA 14 T.Thayaparan
JSA 15 S.S.A.R.Nilochkumar
JSA 16 S.Senkeeran
JSA 18 M.Jude
JSA 42 N.Ranthikumar

(C/20706)

*236/4, Gall Road,*
*Colombo - 3.*
T.Phone: 574199.

M.ARULANANTHAM
(Hony. Secretary)


# UNIVAC

**College of Computer Information Technology**

புதிய கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்.

| Diploma Courses | Certificate Courses |
| --- | --- |
| Mastering Microsoft Office -(8 Months)<br>Computer Programming- (10 Months) | M.S Word, M.S Excel, Pascal, M.S Access, Java, Visual Basic (Each 3 Months) |

- சகல பயிற்சிநெறிகளும் 15.02.2002 திகதி 3.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.
- உத்தியோகத்தர், மாணவர்களுக்கு ஏற்ற வகையில் பிரத்தியேக வகுப்புக்கள் (7.30p.m. வரை) நடைபெறவுள்ளன.
- மாணவர்களுக்கு விசேட ஆங்கில வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறைந்த கட்டணத்தில் விரிவான பாடத்திட்டத்தின்படி முழுமையாக பயிற்சி நெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதே UNIVAC நிறுவனத்தின் தனித்துவம்

(653)

| 1201,K.K.S.Road, Jaffna. | Pointpedro Road, Atchuvely. | Director Sureskumar |
| --- | --- | --- |

## வீடியோ விமல்

எமது புதிய வீடியோ CD வெளியீடு
ஷக்கலக்க பேபி
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(C-20720)

## A/L 2004

வணிகக்கல்வி
நந்தீஸ்
வியா., வெள்ளி
3.30 p.m. (635)
லைசல் - உடுவில்

## வீடியோ வெளியீடு

கிரிக்கெட் புதிய விதிகள்
LAWS OF CRICKET
2000 CODE
பிரதி 300/=
செயலாளர், JCUA
424, 1/1, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம். (570)


## பிரிவுத் துயர்

'உதயன்' கணனிப் பிரிவில் கடமையாற்றும் **சிதம்பரநாதன் சயந்தனின்** அன்புத் தாயார்

**திருமதி**
**செல்வராணி சிதம்பரநாதன்**

அவர்கள் காலமாகிய செய்திகேட்டு துயருறுகின்றோம். தாயாரின் பிரிவால் வாடிநிற்கும் நண்பனுக்கும், அவர்தம் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சக பணியாளர்கள்
'உதயன்' பணிமனை,யாழ்ப்பாணம்.

(C/20723 )


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
உள்ளக விளையாட்டுக் கழகம்
மக்கள் வங்கி வடவலயத்தின்
அனுசரணையுடன்
முன்னாள் அதிபர் கலாநிதி D.T.நைல்ஸ்
ஞாபகார்த்தமாக நடத்தும்

## 4ஆவது உள்ளக விளையாட்டுப் போட்டிகள்

**1.BADMINTON 2.TABLE TENNIS**
**3.CARROM 4. CHESS**

பிரிவுகள் (ஆண்கள்/பெண்கள்)

1. 10 வயதின் கீழ் 1993ஆம் ஆண்டின் பின் பிறந்தவர்கள்.
2. 12 வயதின் கீழ் 1991/92ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்.
3. 14 வயதின் கீழ் 1989/90ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்.
4. 16 வயதின் கீழ் 1987/88ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்.
5. 18 வயதின் கீழ் 1985/86ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்.
6. திறந்த அடிப்படை - வயதுக்கட்டுப்பாடு இல்லை

*விண்ணப்ப முடிவு திகதி:* 28.02.2002 பி.ப. 4மணி
*வீரர் ஒழுங்கு தெரிவு:* 02.03.2002
*போட்டிகள் ஆரம்பம்:* 07.03.2002 பி.ப. 3மணி

*பொறுப்பாசிரியர்கள்:*
Badminton :-திரு.த.சந்திரகுமார்
TableTennis :-திரு.ஜே.மோகன
Carrom :-திரு.க.ஸ்ரீதரன்
Chess :-திரு.கை.சீவரத்தினம

திரு.ஜெ.மோகன்
உள்ளக விளையாட்டு முதல்வர்

திரு.வி.எஸ்.மகேந்திரன்
விளையாட்டு முதல்வர்
- அதிபர்

(சி-20705)

'சரிநிகர்' ஆசிரியர் குழுவால் வெளியிடப்படுகின்றது
**நிகரி**
விலை 12ரூபா மட்டுமே.
தமிழில் மற்றுமோர் மாற்றுப் பத்திரிகை
(C-20722)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.